பக்கங்கள் : பன்னிரண்டு

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2038 மார்கழி 07 ஞாயிற்றுக்கிழமை (23.12.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 27

# உயிலங்குளத்தில் நேற்று 12 மணி நேரம் பெரும் சமர்

## இரு தரப்புக்களும் முரண்பட்ட தகவல்

யாழ்ப்பாணம்,டிசெம்பர்23

மன்னார், உயிலங்குளம் பகுதியில், நேற்றுச் சனிக்கிழமை இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில், ஒரே தொடர்ச்சியாக இடைவெளி இன்றி 12 மணி நேரமாகப் பெரும் சமர் நடைபெற்றது.

நேற்று அதிகாலை 5.40 மணிக்குத் தொடங்கிய இந்தச் சண்டை கடும் சமராக மாறி மாலை 5.20 மணிக்கே ஓய்ந்ததாக செய்தி நிறுவனங்கள் தகவல் வெளியிட்டன.

இதேவேளை கடும் சமரின் விளைவு குறித்து இரண்டு தரப்புகளும் முரண்பாடாக வெவ்வேறு தகவல்களை வெளியிட்டுள்ளதாகவும் செய்திச் சேவைகள் குறிப்பிட்டுள்ளன.

நேற்றைய சமரின்போது இராணுவத்தைச் சேர்ந்த 17 பேர் கொல்லப்பட்டதாகவும் 54 பேர் காயமுற்றதாகவும் படையினரின் முன்னேறும் முயற்சி முறியடிக்கப்பட்டதாகவும் விடுதலைப் புலிகளின் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மன்னார் கட்டளைத் தளபதிகளிடம் இருந்து கிடைத்த தகவல்களின் பிரகாரம் -

இரண்டு முனைகளிலிருந்து உயிலங்குளம் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் முன்னேற முயன்ற இராணுவத்தினர் மீது கடும் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் -

அவர்கள் துரத்தி அடிக்கப்பட்டதாகவும் கிளிநொச்சியில் தெரிவிக்கப்பட்டது.

பல்குழல் எறிகணைகள் மற்றும் ஆட்லறித் தாக்குதல்களுடன் படையினர் மேற்கொண்ட முன்னேற்ற முயற்சி முறியடிக்கப்பட்டதாகவும் புலிகள் தரப்பில் மூவர் பலியானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## பிரதான முன்னரங்க நிலை கைப்பற்றப்பட்டது

உயிலங்குளத்தில் உள்ள விடுதலைப் புலிகளின் பிரதான முன்னரங்க நிலை நேற்றைய சமரின்போது கைப்பற்றப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு நேற்று இரவு தகவல் வெளியிட்டது. இக்கடும் மோதலில் ஆறு விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டதாகவும் படைச்சிப்பாய் ஒருவர் பலியானதாகவும் மேலும் அறிவிக்கப்பட்டது.

கடும் மழையின் மத்தியில் நடைபெற்ற சண்டையின் போது விடுதலைப் புலிகளின் பத்துப் பதுங்குகுழிகள் அழித்து நாசமாக்கப்பட்டதாகவும் அதன்போது சிப்பாய் ஒருவர் காயமுற்றதாகவும் பாதுகாப்பு அமைச்சு அறிக்கை மேலும் தெரிவித்தது.

புலிகள் தமது பதுங்குகுழிகளை மீளக் கைப்பற்ற எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்டதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது (அ-2)

# சமாதானத்தை அடைவதற்காக இன்று இராணுவத் தந்திரோபாயங்களிலே நாட்டம்

## கத்தோலிக்க ஆயர் பேரவை கவலை

யாழ்ப்பாணம்,டிசெ.23

சமாதானத்தை அடைவதற்கு இராணுவத் தந்திரோபாயங்களை நாடுகின்ற வேதனையான நிலைவரமே இலங்கையில் நிலவுகிறது.

இவ்வாறு கவலை தெரிவித்திருக்கிறது இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை. நத்தார் தினத்தை முன்னிட்டு ஆயர் பேரவை விடுத்துள்ள செய்தியிலேயே இப்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

எமது நாட்டின் மீதும் மக்களின் மீதும் உறுதியான நம்பிக்கை வைத்தால் இன்னும் சமாதானத்தைப் பெற்றுக்கொள்ள வழிகள் பல உள்ளன என நம்பலாம். இருபத்தைந்து வருடங்களாக நாம் வற்புறுத்தி மீண்டும் மீண்டும் கூறுவது ஒன்றையே. ஆயுதச் சண்டையால் எமது பிரச்சினைக்குத் தீர்வை பெற் றுக் கொள்ள முடியாது என்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் பொலீஸ் சுட்டுக்கொலை!

மன்னார்,டிசெ,23.

மன்னார் நகரில் பஸ் நிலையத்துக்கு சமீபமாக நேற்றிரவு 7.35 மணியளவில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

வீதிக் கடமையில் ஈடுபட்டிருந்த ஜெயசிங்க என்ற கான்ஸ்டபிள் சிகரெட் வாங்குவதற்காக கடைக்குச் சென்றவேளை சுடப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

படையினர் தேடுதல் நடத்தினர். அங்கு பதற்றம் நிலவியதாகத் தகவல்கள் தெரிவித்தன. (அ-1)

# மாகாண சபைக்கு வெள்ளையடித்து விட்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது

## ஸ்ரீகாந்தா எம்.பி. அறிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.23

என்றோ தோல்விகண்ட மாகாண சபைகள் திட்டத்துக்கு வெள்ளையடித்து அலங்கரித்து அழகுபார்ப்பதன் மூலம் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சியில் எவரும் ஓரடி கூட முன்னேற முடியாது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் என்.ஸ்ரீகாந்தா.

மாகாண மட்டத்தில் அதிகாரம் பகிரப்படுவது குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வெளியிட்ட கருத்துக் குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கொடூர யுத்தத்துக்கு அடிகோலி கொழுந்து

(12ஆம் பக்கம் பார்க்க)

## செய்திச் சரம்

### இளைஞன் படுகொலை

யாழ்ப்பாணம்,டிசெ,23.

இனந்தெரியாதவர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த குமாரகுருநாதன் பிரேமச்சந்திரன் (வயது21) என்பவரே இவ்வாறு சடலமாக ஒப்படைக்கப்பட்டவராவார்.

இவரது சடலம் நேற்று மரணவிசாரணையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (அ-2)

### கொக்குத்தொடுவாயில் முன்னேறும் முயற்சி முறியடிப்பு

கிளிநொச்சி,டிசெ,2..

மணலாறு கொக்குத்தொடுவாய் ஊடாக நேற்றுமுன்தினம் மாலை 5 மணிக்கு படையினர் மேற்கொண்ட முன்னேற்ற முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது என விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

ஷெல் தாக்குதல் நடத்தியவாறு முன்னேறிய படையினரைத் தாம் வழிமறித்துத் தாக்குதல் நடத்தியதாகவும் அப்போது 4 படையினர் கொல்லப்பட்டனர் என்றும் விடுதலைப் புலிகள் மேலும் அறிவித்துள்ளனர.

(12ஆம் பக்கம் பார்க்க)

### 'வேல்ட் விஷன்' அலுவலகம் மீது கிரனேட் வீச்சு

மட்டக்களப்பு,டிசெ,23.

மட்டக்களப்பு நகரில் இயங்கும் 'வேல்ட் விஷன்' நிறுவன அலுவலகத்தின் மீது நேற்றுமுன்தினம்இரவு கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதலில் அந்த நிறுவனத்துக்குச் சொந்தமான மூன்று வாகனங்கள் சேதமடைந்தன.

சம்பவம் நடைபெற்ற வேளை அலுவலகத்தில் எவரும் இல்லாததால் உயிர்ச் சேதம் ஏற்படவில்லை என்று அந்த நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### காலி டெஸ்ட் சம நிலையில் முடிவு

யாழ்ப்பாணம்,டிசெ,23.

காலியில் நடைபெற்று வந்த இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிவடைந்தது. இலங்கை அணி 1-0 எனும் கணக்கில் தொடரைக் கைப்பற்றிக் கொண்டது.

ஐந்தாம் நாளாக நேற்றைய ஆட்டம் இடம்பெற்றது. தோல்வியில் இருந்து இங்கிலாந்து அணியை மழை காப்பாற்றியது. மழை ஆட்டத்தைக் குழப்பும்போது இங்கிலாந்து அணி 6 விக்கெட் இழப்புக்கு 251 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

தொடரின் சிறப்பாட்டக்காரர் மற்றும் போட்டியின் சிறப்பாட்டக்காரர் விருதுகளை மஹேல வென்றெடுத்தார். (அ-2)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## 12ஆம் ஆண்டு நினைவுப் பூக்கள்

மல்லாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட தொழில்நுட்ப மேதை

**அமரர் மாயவர் சிவக்குமாரன்**

திதி: பௌர்ணமி

ஈராறு ஆண்டுகள் தானோடி மறைந்தாலும்
ஆறாது எமதுள்ளம் நின் பிரிவுத் துயர்தனை
ஆற்றாது துடிக்கின்றோம் பன்னிராண்டுகளாய்
ஆறிடவோ முடியவில்லை ஆற்றிடவோ யாருமில்லை
உமது ஆத்ம சாந்திக்காக காளித் தாயை இறைஞ்சுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. (69269)

*ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:*
**மனைவி, பிள்ளைகள்.**

## Power Gym

Body Care & Fitness Centre



4ம் வருடத்தில் காலடிவைத்து தொடர்ந்து நடை பெறும் Power Gym
புது வருடத்தை முன்னிட்டு கட்டணச் சலுகைகளை வழங்குகிறது.
உடல்பருமனை குறைத்து உடல் அழகை மேம்படுத்தவும்
நோய் அற்ற உடல்நிலையைபேணவும் வைத்தியர்களின்
ஆலோசனைகளுடன், சிறந்த பயிற்றுனர்களுடன்,
புதிய உபகரணங்களுடன் Video மூலமானவிளக்கங்களுடன்
பயிற்சியை மேற்கொள்ள உடன் நாடுங்கள்

**பெண்களுக்கு பிரத்தியோக நேரம்**

**நீரிழிவு நோய், இதய நோய் உள்ளவர்களுக்கு சிறந்த உபகரணங்களுடன் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன**

230/1, Navalar Road,
Jaffna.
0779974979



## வீட்டுப் பணிப் பெண் தேவை

நல்லூர் கோயிலுக்கு அண்மையில் வசிக்கும் குடும்பம் ஒன்றின் வீட்டில் தங்கி நின்று குழந்தைகளைப் பராமரிப்பு மற்றும் வீட்டு வேலை செய்யக்கூடிய வீட்டுப் பணிப்பெண் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். ஆர்வமுடையவர்கள் கீழ்க் குறிப்பிட்ட முகவரிக்கு சுய விலாசம் மற்றும் தொலைபேசி எண் இருப்பின் தெளிவாகக் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்: விளம்பர இல: 3039
மே/பா: உதயன்.

## XMAS OFFER

Intel Pentium Dual core 3.0 GHZ/ 4M Processor.
DDR-2-1GB Ram
DVD Writer, Etc
15" CRT Monitor (Samsung)
62,500/=

SKY COMPUTER SYSTEMS
89A, KANDY ROAD,
CHUNDUKULI,
JAFFNA.
T.P: 021 222 9109 (c/54785)

## ரியூசன் - இடவசதி

யாழ்.நகரப்பகுதியில் பிரதான போக்குவரத்து வழிகளை அண்மித்த 50 மாணவர்கள் இருக்கக் கூடிய 5வகுப்பறைகள் கொண்ட இடவசதி A/L வகுப்புகள் நடத்துவதற்கு வாடகைக்கு அல்லது விரும்பிய வகையில் பேசித் தீர்மானித்து வழங்கப்படவுள்ளது.
**தொடர்களுக்கு: 021 222 7442**

## இறைச்சிக்கோழி

3Kg விற்கு மேற்பட்ட புறொயிலர் 1Kg 450/-, சுத்தம் செய்தது 650/-. வியாபாரிகளுக்கு விலை குறைக்கப்படும். (சுத்தம் செய்தல் இலவசம்)
1. NEW R.S.K FARM- மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில்.
2. NEW R.S.K FARM- கே.கே.எஸ். வீதி, சுன்னாகம். (கொமர்சல் வங்கி அருகில்) (68707)

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## நெஞ்சைவிட்டு அகலா நினைவுகளுடன் 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| அன்னை மடியில் 1982 - 08 - 16 | அன்னை மடியில் 1951 - 12 - 25 | அன்னை மடியில் 1986 - 09 - 27 |
|---|---|---|
| அற்புததேவன் காங்கேசன் | முத்துக்கிருஸ்ணர் அற்புததேவன்(மாயவர்) | அற்புததேவன் யதீசன் |

**ஆழியின் பிடியில் 26.12.2004**

**திதி:- 23.12.2007**

மூன்று ஆண்டுகள் சென்றாலும் நீர் எமக்கு தெய்வமல்லவா? எத்தனை கோடி கொடுத்தாலும் - உம்முடன் வாழ்ந்த சந்தோஷ காலங்களிற்கு ஈடாகுமா? எத்தனை ஜென்மம் எடுத்தாலும் உங்கள் உறவே எம்முடன் தொடர வெண்டும் என்று வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*தாவடி வடக்கு,*
*கொக்குவில்.*

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

## தேவை

புடைவைக் கடைக்கு உகந்த அலுமினிய தளபாடங்கள் தேவை.
**ஏசியன் புடைவையகம்**
பலாலி வீதி,
திருநெல்வேலி.
T.P. 2983 (69254)

## விற்பனைக்கு

10HW 3P
லைற் எஞ்சின் விற்பனைக்குண்டு
தொடர்பு:
19, சிறாம்பியடி லேன், ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
(69255)

2007ம் ஆண்டு G.C.E(O/L) எழுதிய மாணவர்களுக்கான

## விசேட கணனிப் பயிற்சி நெறிகள்

### DIPLOMA IN VISUALIZE MANAGEMENT

*Computer fundamentals, GUI fundamentals, OS fundamentals, Internet E-mail, IT fundamentals, GIT introduction, Windows Operation, Document Management, Print Spooling & job management through MS Word, Creating and delivering presentation through MS Power Point, Accelerating and amusing accounts through worksheet & Spread Sheet Via MS Excel, MS Access*

### DIPLOMA IN HARDWARE ENGINEERING

*◆ Chip & Card level Trouble shooting ◆ Assembling ◆ Various Mother Board Handling ◆ Upgrading ◆ Fault Finding ◆ Repairing ◆ Servicing ◆ Printer, Scanner & Com device management ◆ Software Installation ◆ Configuring Internet Interfacing & Trouble shooting*

**காலம் - 3மாதங்கள்**


பதிவுகள் **31/12/2007** முன்

பயிற்சி நெறிகள் ஆரம்பம்: பிரிவு I:- 28.12.2007, பிரிவு II:-05.01.2008

## Softview Computer College

55, Arasady Road, Jaffna.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH)கடந்த 23.11.2007 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா(HNDM)பட்டம் பெற்ற யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட **மகேந்திரன் விஜிதன்** அவர்களை மேலும் பல பட்டங்கள் பெற்று வாழ்வில் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

*336/24, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (69237)

ம. பிரதீபன் (அண்ணா),
பெற்றோர்.

## ASSEMBLIES OF GOD BIBLE COLLEGE

**NORTHERN EXTENSION**
DUTCH ROAD, UDUVIL, CHUNNAKAM
**அசெம்பிளிஸ் ஒப் கோட் வேதாகமக் கல்லூரி வட பிராந்தியம்**
டச்சு வீதி, உடுவில், சுன்னாகம்

**"Equip your self to Serve God"**

Courses for Diploma in Theology (2years) for the year of 2008. Application forms are available for new admissions.

| | |
|---|---|
| Closing Date: | 05.01.2008 |
| Registration & Interview: | 10.01.2008 |
| Commencement: | 15.01.2008 |

Modular Evening Courses on Weekends.

Apply to:

The Dean of Students,
Assembles of God Bible College -
Northern Extension,
Dutch Road, Uduvil.
Phone fax-0094212225501,0779194622
E-Mail- suriraja@sltnet.lk

*"Distinctively Pentecostal"*
*(Accreditation with ATA)*

(69253)

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்துரை பொன்னம்மா



கட்டுவனைப் பிறப்பிடமாகவும், தெல்லிப்பழை, வீமன்காமத்தை நிரந்தர வசிப்பிடமாகவும், வண்ணார்பண்ணை, மதவடி ஒழுங்கை, நாச்சிமார்கோயிலடியை தற்போது வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்துரை பொன்னம்மா நேற்று (22.11.2007) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும் விமலாதேவி, காலஞ்சென்ற பவானிதேவி, வசந்தாதேவி (நீர்கொழும்பு), ஸ்ரீகாந்தன் (கனடா), சித்திரா ஆகியோரின் அன்புத் தாயும் திருலோகச்சந்திரன் (மணி), விக்டர், கோணேஸ்வரி (றெஜி), காலஞ்சென்ற பாஸ்கரன் (உதயன், முன்னாள் சாரதி) ஆகியோரின் மாமியும் மதனறூபன், அபிராமி, துஷித்ததர்சன், புஸ்பகுமார், நமிதா, நிஷாந், ரஜுஜன், அனுஜன், சஞ்சிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.12.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11மணியளவில் 555/4 கே.கே.எஸ்.வீதி, மதவடி ஒழுங்கை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*555/4, காங்கேசன்துறை வீதி,*
*மதவடி ஒழுங்கை*
*யாழ்ப்பாணம்.* (69263)

தகவல்:
பாஸ்கரன் சித்திரா,
விமலாதேவி(மகள்மார்),
(விமலா ஸ்ரூடியோ)

### சபாபதி தனபாலன்

(M.S.O., தபாலகம், யாழ்ப்பாணம்)



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் சிறுப் பிட்டி தெற்கு, நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதி தனபாலன் அவர்கள் (22.12.2007) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதி-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - ஆச்சிமுத்து தம்பதியினரின் மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், அமரர் மதியாபரணம், பரிமளகாந்தி, இரஞ்சிதமலர், சற்குணபாலராஜா(இத்தாலி), விமலகாந்தி (நோர்வே), தனபாலராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாலசிறி(JaffnaCellular), ஸ்ரீமோகன் (நோர்வே), விஜயசிறி (நோர்வே), அமரர் ஸ்ரீதரன், சிவகௌரி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவாஜினி,ஜெயக் குமாரி(நோர்வே), சிறீஸ்கந்தராசா (தேசிய சேமிப்பு வங்கி, பருத்தித்துறை) ஆகியோரின் மாமனாரும், பாரதி, பகீரதி, சுதாமதி, சாருஜன், அட்ஷயன், ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.12.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்ளுக்காக சிறுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"சிவ மஹால்"*
*சிறுப்பிட்டி தெற்கு,*
*நீர்வேலி.* (69267)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் பற்றி எதுவுமே பேசுவதற்கு அஞ்சுகின்றனர் யாழ்ப்பாண மக்கள்

**தேசிய சமாதானப்பேரவை ஏற்பாடு செய்திருந்த சர்வமத சமாதான மாநாடு கடந்த வாரம் யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இம்மாநாட்டை நடத்துவதுபற்றி நிலைமையை ஆராய்வதற்காக யாழ்ப்பாணம் வந்தபோது தான் அவதானித்த வற்றை ''எம்மால் அழ மட்டும்தான் முடியும்'' என்ற தலைப்பில் ''டெய்லி மிரர்'' பத்திரிகையில் எழுதியுள்ளார் தேசிய சமாதானப்பேரவையின் பணிப்பாளர் கலாநிதி ஜெகான் பெரேரா. அக் கட்டுரையின் தமிழாக்கம் இங்கு தரப்படுகின்றது.**

## ''எம்மால் அழ மட்டும்தான் முடியும்''

''எம்மால் அழ மட்டும் தான் முடியும்'', பலாலியிலிருந்து யாழ்ப்பாணம் போவதற்காக கொளுத்தும் வெயிலில் பஸ்ஸில் காத்திருந்தபோது எனக்கருகில் அமர்ந்திருந்த பயணி ஒருவர் இவ்வாறு சொன்னார்.

நாங்கள் இரண்டு மணித்தியாலம் முன்னதாகவே பலாலி விமானநிலையத்தை வந்தடைந்துவிட்டோம், ஆனால் விமான நிலையத்தை விட்டு வெளியேறும் பயணிகளுக்கு பலநடைமுறைகள் இருந்தன, புகைப்படம் எடுப்பது உட்பட. பிரயாணிகள் உச்சப் பொறுமையுடனும் வேதனையுடனும்இருந்தார்களென்பதில் சந்தேகமில்லை. சுற்றிவர சீருடையினர் ஆயுதத்துடன் தடுத்து வைக்கவோ திருப்பியனுப் பவோ தயாராக இருந்த நிலையில் காணப்பட்டனர்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் கடைசியாக யாழ்ப்பாணம் போனபோது வெளிநாடுகளிற்கு புலம்பெயர்ந்த தமிழர்கள் தமது குடும்ப உறவுகளை புதுப்பித்துக் கொள்வதற்காக ஊர் திரும்பிக் கொண்டிருந்தனர். இம்முறை விமான நிலையத்தில் இருந்தவர்கள் கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் ஏ-9 பாதை மூடப்பட்டதால் பயணம் செய்வதற்கு வேறுமார்க்கமின்றி விமானம் மூலம் பிரயாணம் செய்பவர்கள். கப்பல் பயணம் பற்றி நான் கேள்விப் பட்டிருந்தேன், அது பயங்கரமானது. அத் துடன் உடல் நலம் அற்றவர்கள் கப்பலில் பயணம் செய்ய முடியாது எனவும் ஒருவர் கூறியிருந்தார். விமானப்பயணத்திற்கு மேலதிக பணத்தை செலவிட முடியாதவர்களே கப்பல் பயணத்தை நாடுகின்றார்கள். கொழும்பு - யாழ். விமானப் பயணம் புறப்பட்டதிலிருந்து எல்லாம் தாமதமாகவே நடைபெற்றன. விமானப் பயணச்சீட்டு வழங்கும் அலுவலகத்திலிந் தவர்கள் எம்மை அதிகாலை 5.15 மணிக்கு வருமாறு கூறியிருந்தனர் இரத்மலானைக்குச் செல்வதற்கான பஸ்ஸில் ஏற்றிச்செல்வதற்காக. ஆனால், ஆறு மணிக்கே பஸ் புறப்பட்டது. விமான நிலையத்திற்கு வெளியே இரு தடவைகள் எமது பொதிகள் பாதுகாப்புப் படையினரால் சோதனையிடப்பட்டன. முற்பகல் 9.30 மணிக்கு விமானம் புறப்பட்டது. ஒரு மணித்தியால யத்திற்கும் சற்று அதிகமான நேர பிரயாணத்தின் பின் விமானம் பலாலியில் தரையிறங்கியது. புகைப்படம் எடுத்தல், விசாரனை போன்ற நடைமுறைகளுக்கு இரண்டு மணித்தியாலங்களுக்கு மேல் எடுத்தது. நேரம் பிற்பகல் ஒரு மணியாகிவிட்டது . அதன்பின்னர் மிகவும் களைப்புற்ற நிலை யில் குளிர்சாதன வசதியற்றபஸ்ஸில் புளுக்கத்துடன் நாம் பயணித்தோம். பிரயாணம் மிக மோசமாக இருந்தது.

### திரும்பத் திரும்பச் சோதனை

பலாலித் தளத்தில் எமது பயண ஆவணங்கள் ,பொதிகள் திரும்பத்திரும்ப சோதனையிடப்பட்டன. சோதனை நடைபெற்ற கொட்டகைகளிலுள்ள வசதிகள் கால்நடைகளின் கொட்டகைகளை விட சிறந்தவையல்ல. அவை முற்று முழுதாக உலோகத் தகடுகளால் அமைக்கப்பட்டுள்ளன, தூசிப்படலம் படிந்திருந்தது, மழை காலங்களில் இந்த இடம் சேறாக காணப்படும். இவை விமானத்தளப் பாதுகாப்புக்கருதி இராணு வத்தினரின் பாதுகாப்பு நோக்கில் அமைக்கப்பட்டவை. பிரயாணிகளுக்காக அமைக்கப்பட்டவை அல்ல என்பது தெளிவாகத் தெரிந்தது. பயணிகளில் சிலர் நோயாளிகளாகவும் சிலர் வயோதிபர்களாகவும் காணப் பட்டனர். கடமையில் இருந்த இளம் சிப்பாய்கள் இவர்கள் மீது பரிவுடன் நடந்துகொண்டனர். நாங்கள் கொழும்பிலிருந்தபோது யாழ்ப்பாணம் செல்வது பற்றிய ஒரு மனப் பயம் எம்மிடம் இருந்தது. ஆனால் பிரயாணத்தின்போது ஏற்பட்ட களைப்புக் காரணமாக பிரயாணம் பாதுகாப்பற்றதாக எமக்குத் தென்படவில்லை. நான் ஏனைய பயணிகளுடன் புகைப்படம் பிடிக்கப்பட்ட போதோ, விசாரணைக்குட்படுத்தப்பட்ட போதோ, பயண ஆவணங்களைக் காண்பித்தபோதோ எம்மை யாழ்ப் பாணத்திற்கு செல்லவிடாமல் திருப்பியனுப்பலாம் என்ற நிலை காணப்பட்டது. ஏனைய பயணிகள் சிலர் பிரச்சினைகளை விளக்குவதற்குச் சிரமப்பட்டனர். இதைப் பார்த்த போது இராணுவ அதிகாரி முழு அதிகாரம் உடையவர்போல் காணப்பட்டார். நாங்கள் ஒரு பிரஜைகள் போல் அவருக்குத் தென்படவில்லை.



### அளவுக்கதிகமான அதிகாரம்

இவ்வாறு இராணுவத்தினருக்கு அளவுக்கதிகமான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ள ஒருசூழலின் கீழேயே யாழ் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். விமான நிலையத்திலிருந்து நான் அவதானித்த இராணுவத்தினருக்கு வழங்கப்பட்டுள்ள அளவுக்கதிகமான அதிகாரங்களும் யாருக்கும் முறையிட இயலாத யாழ். மக்களின் இயலாமை

**தமிழில்: ந.பரமேஸ்வரன்**

நிலையுமே இந்தக் கட்டுரைக்கு இந்தத் தலைப்பை இடுவதற்கு என்னைத் தூண்டியது. நாங்கள் யாழ்ப்பாணம் செல்வதற்காகப் பஸ்ஸில் காத்திருந்தபோது யுவதி ஒருவரை யாழ்ப்பாணம் போக அனுமதிக்க முடியாதெனவும் அவரைத்திருப்பியனுப்பப் போவதாகவும் இராணுவத்தினர் கூறிக் கொண்டிருந்தனர். நீண்ட உரையாடலின் பின் அந்தப் பெண் கண்கள் கலங்கிய நிலையில் வந்து பஸ்ஸில் ஏறி எனக்கு முன்னாலிருந்த ஆசனத்தில் அமர்ந்தாள். என்ன நடந்தது என்று விசாரிப்பதற்கு எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. நாங்கள் யாழ்ப்பாணத்திற்குள் நுழைவதற்கு எமக்கு நீல நிறத்திலான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்து.

அந்த யுவதி யாழ்.பல்கலைக்கழக மாணவி. ஜேர்மனியிலிருந்து வந்த ஒருவரை அண்மையில் தான் திருமணம் செய்துவிட்டு யாழ்ப்பாணம் திரும்பிக் கொண்டிருந்தார். இவர் யாழ்ப்பாணத்தை விட்டுப் புறப்படுவதற்கு முன் யாழ்ப்பாணத்திள்ள சிவில் அலுவலகத்தில் அனுமதி ,பெற்றிருக்கவேண்டும். அந்தப் பெண்ணிடம் அந்த அனுமதிப் பத்திரம் இருக்க வில்லை. அது தான் பிரச்சினைகளுக்குக் காரணம். எம்மால் அழத்தான் முடியும் என்றார் அந்த யுவதி.

### காடாக மாறிவிட்ட பகுதியூடு பயணம்

யாழ்ப்பாணத்திற்கான விமானப் பயணம் செடிகள் நிரம்பிய காட்டினூடான பயணம் போன்றிருந்தது. பஸ் உயர்பாதுகாப்பு வலயத்தினூடாக யாழ்ப்பாணத்திற்கு எம்மை அழைத்துச் சென்றது. ஒரு காலத்தில் நகரத்திற்கும் கிராமத்திற்கும் இடைப்பட்ட பிரதேசமாகக் காட்சியளித்த பிரதேசம் காடாகக்காட்சியளித்தது. நாங்கள் கடந்துசென்ற கட்டடங்கள், வீடுகள், வர்த்தக நிலையங்கள், சமுதாயச்சுவர்கள் என்பவற்றின் எச்சமாகக் காட்சியளித்தது. இப்போது அந்தக்கட்டடங்களுக்கு மேலால் மரங்கள் வளர்ந்திருந்தன. கடந்த பத்துப் பதினைந்து வருடங்களில் மரங்கள் மிகவும் வளர்ந்துள்ளன. புலிகளின் தாக்குதலிலிருந்து விமானத் தளத்தைப் பாதுகாக்கும் பிரதேசமாக இப்பகுதி காணப்பட்டது. பஸ் நகரப் பகுதியை அடைந்த போது தான் எதிர்பார்த்ததற்கு மாறாக ஒரு காட்சியைப் பார்க்க முடிந்தது. புலிகளை ஓரங்கட்டும் நோக்குடன் அரசாங்கம் 2006 நடுப்பகுதியில் ஏ-9 பாதை மூடியதைத் தொடர்ந்து அங்கு பொருள்களுக்கும் தட்டுப்பாடு நிலவியது. கொழும்பு விலையைவிட நான்கு மடங்கு அதிகரித்த விலையில் பொருள்கள் விற்பனை செய்யப்பட்டன. ஆனால் இம்முறை பஸ் யாழ்ப்பாணத்திற்குள் நுழைந்ததும் கடைகளில் பொருள்கள் தாராளமாக இருப்பதை



அவ தானித்தேன். அழகிய உடைகளால் அலங்கரிக்கப்பட்ட பொம்மைகள் சிறுவர்களையும் பெற்றோர்களையும் கவரும் விதத்தில் அமைந்திருந்ததையும் அவதானித்தேன். இறுதியாகப் பொருள்களின் விலைகள் கொழும்பு விலையிலிருந்து 25 தொடக்கம் 50 வீதம் வரை அதிகரிக்கப்பட்ட விலையில் விற்பனை செய்யப்படுவதையும் காணக்கூடியதாகவிருந்தது. கப்பல் மூலம் மட்டுப்படுத்தப்பட்டளவில் எடுத்து வரப்படும் பொருள்கள் யாழ். மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யப் போதுமானவை அல்ல என்பதில் சந்தேகமில்லை.

### ஊரடங்குச்சட்டம் 9 மணிக்கு ஆனால் கடைகள் 4 மணிக்கே பூட்டு

ஊரடங்குச்சட்டம் இரவு ஒன்பது மணிக்குத்தான். ஆனால் கடைக்காரர்கள் மா லை நான்கு மணிக்கே கதவுகளை மூட ஆரம்பித்து விடுகின்றனர். ஐந்து மணிக்குப் பின்னர் மக்கள் வீதிகளில் இருந்து காணாமல்போய் விடுகின்றனர். இருள் சூழ்ந்த பின் மக்கள் வெளியே வர விரும்புவதில்லை. மாலை ஆறு மணிக்கு சோதனைச் சாவடியில் எமது வாகனத்தை மறித்த சிப்பாயிடம் ஊரடங்குச்சட்டம் எத்தனை மணிக்கு என வினவியபோது அவர் ஏழு மணிக்கு எனப் பதிலளித்தார். சிங்களம் பேசும் சிப்பாய்களுக்கும் தமிழ் பேசும் சாதாரண மக்களுக்குமிடையே தொடர்பாடல் பாரிய பிரச்சினையாகவுள்ளது. நாங்கள் எதிர்பாராத விதமாக இராணுவத்தினரை எதிர்கொண்டபோது இராணுவச் சிப்பாய்கள் எம்முடன் மிகவும் பரிவாக நடந்து கொண்டனர். எமது வாகனத்திலிருந்தவர்கள் சிங்களத்தில் உரையாடிய படியால் எம்மைச் சிங்களவர்கள் என அவர்கள் தெரிந்து கொண்டதே பரிவுக்குக் காரணம்.

யாழ்ப்பாணத்தில் நாம் தங்கியிருந்த போது கடைகளில் பணியாற்றிய சிப்பந்திகள் எவரும் யாழ்ப்பாணத்தின் உண்மையான நிலவரம் பற்றி எதுவித அபிப்பிராயங்களையும் தெரிவிக்க முன்வரவில்லை. தினமும் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து என்ற எண்ணிக்கையில் கொலைகள் நடைபெறுகின்றன. ஆனால் எவரும் கைது செய்யப்படவில்லை என ஒருவர் கூறினார். தொலைத் தொடர்பு உரிமையாளர் ஒருவர் பட்டப்பகலில் பலர் முன்னிலையில் சுட்டுக்கொல்லப் பட்டதையும் அவர் கூறினார். ஒவ்வொரு சந்திகளிலும் பல இராணுவச் சிப்பாய்கள் கடமையில் ஈடுபட்டுள்ளனர். பட்டப் பகலில் கொலையாளிகள் கொலைகளைச் செய்து விட்டுச் சென்று விடுகின்றனர். இரவு பயங்கரமாகவுள்ளது. மாலையிலேயே வீதிகள் வெறிச் சோடி விடுகின்றன.

### உள்ளூர் பத்திரிகைச் செய்திகள்

நான் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த வேளையில் உள்ளூர் யாழ்ப்பாணப் பத்திரிகைகளில் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வி தலைப்புச்செய்தியாகப் பிரசுரமாகியிருந்தது. அதில் அவர் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தம் பயங்கரவாதத்திற்கு எதிரானது எனவும் கடத்தல்கள், கொலைகளை நிறுத்துவது சாத்தியமற்றது எனவும் கூறியிருந்தார். யாழ்ப்பாணத்தில் நடைபெறும் கொலைச் சம்பவங்கள் மக்களிடையே ஓர் அச்சம் நிறைந்த சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாக யாரும் அரசியல் பேசத் தயங்குகிறார்கள். அரசியல் பேசுவதன் காரணமாக பிரச்சினைகளில் சிக்கிக் கொள்வதை அவர்கள் விரும்பவில்லை. இராணுவத் தளபதியின் கூற்று இதை உண்மையாக்குகிறது. நான் சந்தித்த பொது மக்களிடையே இந்த மோசமான தாக்கத்தை என்னால் உணர முடிந்தது.

உண்மைகளை அறிந்து கொள்ள விரும்பாமல் யார் பயங்கரத்தினுள் வாழ்கிறார்களோ அவர்கள் மீது அக்கறை செலுத்தவேண்டியது, அவர்களைக் கவனிக்க வேண்டியது, பாதுகாப்பளிக்க வேண்டியது, கொலைகாரர்களிடமிருந்து பாதுகாக்க வேண்டியது அரசின் அதிகாரம். அரச ஆதரவாளர்கள் அல்லது புலி எதிர்ப்பாளர்கள் மக்களை இந்தத் துன்பமான நிலைக்குத் தள்ளியுள்ளனர். ஆனால் மனிதாபிமானப் பிரச்சினைகளைத் தற்போதைய சூழ்நிலை எடுத்துக்காட்டியுள்ளது. நாம் யாழ்ப்பாணம் சென்றது ஒரு சர்வமத சமாதான மாநாட்டை அங்கு நடத்தலாமா என ஆராய்வதற்காக, அதற்கு ஆம் என்ற பதிலே அனைவரிமும் கிடைத்தது. மக்கள் தமது உணர்வுகளை நாட்டுடனும், உலகத்தினுடனும் பகிர்ந்த கொள்ளவே விரும்புகின்றனர். அவர்கள் தமது உணர்வுகளை மூடிவிடவோ, மறந்து விடவோ விரும்பவில்லை. ⁕

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்வாழ்வில் பொன்விழாக் காணும்

பனை அபிவிருத்திச்சபை ஸ்தாபகத் தலைவரும்
ஆஸ்திரேலியாவில் ஈழத்தமிழ் மக்களுக்கு
அரும்பணியாற்றிவருபவருமான

## திரு-திருமதி நடராஜா தம்பதியினர்



**இலங்கையின் முன்னாள் சட்டமா அதிபரும் நியூ சவுத் வேல்ஸ் மூத்த பிரஜைகள் சங்க தலைவருமாகிய திரு. சிவா பசுபதி அவர்கள் வழங்கிய ஆசியுரை**

மகிழ்ச்சியான ஐம்பது வருட மணவாழ்வு என்பது ஒரு தம்பதியரின் வாழ்வில் ஒரு மைல் கல் எனலாம். இந்த வரம்பெற்ற சிலரின் வரிசையில் இன்று திரு. நடராஜா தம்பதியரும் இணைந்து கொள்கின்றனர் என்பதில் நாம் மகிழ்கிறோம்.

திரு.நடராஜா அவர்கள் தமது வாழ்க்கையை ஓர் ஆங்கில ஆசிரியராக ஆரம்பித்தாலும் குறுகிய காலத்தில் யாழ்.மாவட்டத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தராக 1975 ஆம் ஆண்டில் நியமனம் பெற்று அன்று அரச அதிபராக இருந்த கலாநிதி நேசையா[illegible]ன் சேவையாற்றினார்.

கலாநிதி என்.எம்.பெரேரா நிதி அமைச்சராக இருந்த காலத்தில் பனைவள இணைப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டார். இக் காலத்தில் அவரின் அயராத முயற்சியினாலேயே [illegible] முறை இரத்துச் செய்யப்பட்டு பனை உற்பத்தி கூட்டுறவு சங்கங்கள் நிறுவப்பட்டன. திரு.நடராஜா அவர்களின் அபார திறமைகள் இனங்காணப்பட்டு [illegible] இல் அவர் இலங்கை அரச கூட்டுத்தாபனமான பனை அபிவிருத்திச் சபையின் தலைவராக நியமனம் பெற்றார். எந்தவொரு அரச கூட்டுத்தாபனத்திலோ அன்றில் சபையிலோ நடந்திருக்கமுடியாத ஒன்றாக ஒரு சாதனையாக அவர் 15 வருடங்கள் தொடர்ச்சியாக தலைவர் பதவி வகித்தமை அவரின் திறமைக்கும் ஆற்றலுக்கும் ஓர் எடுத்துக்காட்டு என்று கூறினால் அது மிகையாகாது. இப்பதவியுடன் அவர் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் அத்தியட்சகராவும் பணியாற்றியுள்ளார். தற்போது இலங்கையில் நிலவும் பாதுகாப்பற்ற போர்ச் சூழலிலும் பனை அபிவிருத்திச் சபை நிலைத்து நின்று வளர்ந்து கொண்டிருக்கின்றதென்றால் அதன் காரணம் திரு.நடராஜா அவர்களின் தனித்துவமான சேவையின் போது அவரால் இடப்பட்ட பலமான அத்திவாரமே என ஐயமின்றி அறுதியிட்டுக் கூறலாம்.

தன் தாய் மண்ணுக்கு அளப்பரிய சேவையாற்றிய பின் 1995இல் திரு. நடராஜா தன் குடும்பத்துடன்ஆஸ்திரேலியா நாட்டுக்கு புலம் பெயர்ந்தார். இந்நாட்டிலும், சிட்னி முருகன் ஆலயத்திலும், சிட்னி தமிழ் அறிவகத்திலும் ஒரு சகாப்தத்திற்கு மேலாக தொண்டாற்றியுள்ளார். அத்துடன் தமிழ் மூத்த பிரஜைகள் சங்கத்தின் செயலாளராகவும் செயலாற்றியுள்ள அவர் தொடர்ந்தும் இன்றும் பல வகையில் சங்கத்திற்கு தன் சேவையை வழங்கிய வண்ணமுள்ளார். ஆஸ்திரேலிய அரசுக்கும் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கும் உத்தரவு பெற்ற மொழிபெயர்ப்பாளராகவும் சேவையாற்றி[illegible]றார். அண்மையில் கிறிஸ்மஸ் தீவில் தமிழ் அகதிகளை நேர்காணும் முகமாக திரு நடராஜா அவர்களின் சேவையை அரசு கோரிப் பெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

ஒவ்வொரு மனிதனின் வெற்றியின் பின்னால் ஒரு பெண் இருப்பாள் எனும் கூற்றுக்கு அமைய அவரின் மனைவி கடந்த 50 ஆண்டு காலமாக அவரின் ஒவ்வொரு [illegible] பெரிய குடும்பத்தை பராமரிப்பதிலும் உறுதுணையாகவும் ஆதாரமாகவும் இருந்துள்ளார்.

"பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த மக்கட் பேறல்ல பிற"

எனும் வள்ளுவரின் கூற்றுக்கமைய நடராஜா தம்பதியர் பேறு பெற்றவர்களாவர்.

திரு.திருமதி நடராஜா தம்பதியர் மேலும் பல்லாண்டு பல்லாண்டு இணைந்து வாழ்க என நியூ சவுத் வேல்ஸ் தமிழ் மூத்த பிரஜைகள் சங்கத்தின் சார்பில் வாழ்த்துவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

**யாழ் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளரும் உலக பல்கலைக்கழக சேவை ஸ்தாபனத்தின் தலைவருமாகிய திரு.இ.இரத்தினம் அவர்கள் வழங்கிய ஆசியுரையிலிருந்து:**

திரு.கே.நடராஜா அவர்களை இப்பொன்னான நன் நாளில் வாழ்த்த எனக்கு வயதில்லை: ஆகையால் தம்பதியரை வணங்கி மகிழ்கிறேன்: அவர் எம் தமிழ் சமூகத்துக்கு ஆற்றிய சேவைகளையும், சாதனைகளையும் விரிவாக எழுத விளைந்தால் காலமும் இடமும் போதாது. எனவே அவற்றுள் சிலவற்றை இவ்விடத்தில் நினைவு கூருவது பொருத்தமென எண்ணுகிறேன்.

1. தமது 22ஆவது வயதிலேயே 6 புதிய பாடசாலைகளை கிராமங்களில் உருவாக்கியவர்.
2. தமிழ் ஈழத்திற்கு இயற்கை தந்த மூல வளங்களை ஒன்றிணைத்து பலரும் பாராட்டும் வண்ணம் பற்பல தொழிற்சாலைகளை நிறுவினார். அவை தற்போதுள்ள போர்ச் சூழலிலும் நிலைத்து நிற்கின்றன.
3. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனத்தின் அனுசரணை பெற்று எமது பிரதேசத்தில் பல்வேறு சிறு கைத்தொழில்களை, ஏற்றுமதி செய்யுமளவிற்கு கொண்டு வந்ததோடு பல தமிழ் இளைஞர், யுவதிகளுக்கு பல்வேறு துறைகளில் அவர்கள் பல நாடுகளுக்கு சென்று படிக்கவும் முதுமாணிப் பட்டம் பெறவும் வழி வகுத்தார்.
4. கொழும்பு தலைநகரிலும், வடக்கு கிழக்கு நகரங்கள் அனைத்திலும் 'கற்பகம்' என்றால் தமிழரின் ஸ்தாபனம் என நினைக்க வைத்தார்.
5. தனது சேவையின் சிறப்பால் 1980ஆம் ஆண்டிலிருந்து 1995 வரை தொடர்ச்சியாக பல அமைச்சர்களின் ஜனாதிபதிகளின் கீழ் பணியாற்றியபோதும், தன்மானத்தையும், தமிழர் அடையாளத்தையும் தமது சேவை மூலம் அடையாளப்படுத்தினார்.

வாழ்த்துவோர்: நண்பர்கள், நலன்விரும்பிகள்



## வாழ்த்துகின்றோம்



கொக்குவில் - கோண்டாவில் பிரிவுக்கு
விவாக - பிறப்பு - இறப்பு (பதிவு)
பதிவாளராக நியமனம் பெற்றுள்ள

**திருமதி வரதலக்ஷ்மி சோமசூரியசிங்கம்**

அவர்களை மனதார வாழ்த்துகின்றோம். சமூக சேவையையே இலட்சியமாகக் கொண்டவருக்கு இந்நியமனம் கிடைத்தமையிட்டு பெருமகிழ்ச்சி அடைவதோடு இவரின் பணி நீண்ட காலம் மக்களுக்கு கிடைக்க விநாயகர் அருள் புரிவாராக

திரு.திருமதி S.ஸ்ரீஸ்கந்தராஜாக் குருக்கள்
குடும்பம் (சிறீஜயா).

கோண்டாவில் மேற்கு. (69226)

## .IIS

**கணனிக்கற்கைநெறிகள்**
**புதிய பிரிவுகள் ஆரம்பம்.**

பிரிவு 1: 04/01/2008
பிரிவு 2: 05/01/2008
பிரிவு 3: 23/01/2008
பிரிவு 4: 26/01/2008

கணனிக்கற்கை நெறிகள்

1. Diploma in Microsoft Office
2. Diploma in Desktop Publishing
3. Diploma in Internet Technology
4. Diploma in Hardware Technology
5. Diploma in Computer Programming
6. Diploma in Eng.Drawing & AutoCAD
7. Diploma in Computerized Accounting
8. Certificate in Java Programming
9. Certificate in Visual C Programming
10. Certificate in Visual Basic Programming


கணனிக் கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தின் இணைத்தளூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்.



INSTITUTE OF INFORMATICS STUDIES
100,CLOCK TOWER ROAD, JAFFNA.
T.P.No:021 222 2831



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**லயன் சின்னத்தம்பி சற்குணநாதன்**
(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப போதனாசிரியர்) Retd.T.A

மலர்வு 13.11.1938 — உதிர்வு 18.11.2007

எங்கள் அன்புத் தெய்வமே!
காலங்கள் எவ்வளவு கடந்தாலும்
மாறாது நீங்கள் மறைந்த துயரம்
தங்களின் அன்பு கனிந்த
புன்சிரிப்புடன் கூடிய உணர்வுபூர்வமான
இனிய நினைவுகள்
ஒருபோதும் எம்மை விட்டு நீங்காது.

எங்கள் தந்தையின் பிரிவுத்துயரில் எங்களுக்குப் பக்கபலமாய் ஆறுதல் கூறி தேற்றிய அன்பு உற்றார், உறவினர், பெரியோர்கள், நண்பர்கள் வெளிநாடுகளிலிருந்து ஆறுதல் கூறிய நண்பர்கள், பிரத்தியேக தகவல்கள் கொடுத்த அனைவருக்கும் எமது சிரம் தாழ்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மனைவி: இரத்தினபூபதி
மகன்: வேணுகோபன் - மைதிலி
மகள்: விஜயரஞ்சினி - இரத்தினகுமார்
நவரஞ்சினி - கேதீஸ்வரன்,
ஸ்ரீரஞ்சனி - பரமேசுதன்,
தம்பி: சிவராஜா.

தகவல்:
குடும்பத்தினர்.

Tel: 02088454283, 07956431555,
07931412926, 07956507851,
[illegible] (A/54778)

## வாடகைக்கு

யாழ்ப்பாணம், நாவலர் வீதி No.5998601 என எண்ணுடையதும்; முன்னர் றூலிங்ஸ் ஸ்தாபனத்துக்கு வாடகைக்கு விடப்பட்டிருந்ததுமான நவீனமாக திருத்தி அமைக்கப்பட்ட Store மற்றும் வாகன வசதியுள்ள, பாதுகாப்பான - மதில் சுவர் கொண்ட கட்டடம் வாடகைக்கு உண்டு.

விவரம் பெற 0773107578

(69221)

## மரண அறிவித்தல்

**திருமதி குமாரரத்தினம் சின்னம்மா**



வேலணை கிழக்கு, 2 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரரத்தினம் சின்னம்மா 18.12.2007 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அமிர்தலிங்கம்- சின்னத்தங்கம் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற குமாரரத்தினத்தின் அன்பு மனைவியும், கருணானந்தசிவம் (கனடா), மணிமேகலாதேவி (ஆஸ்திரேலியா), சற்குணதேவி (கனடா), ஸ்ரீதரன், வரதலட்சுமி, ராகுலன்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுகந்தாதேவி(கனடா), சுந்தரமூர்த்தி (ஆஸ்திரேலியா), பத்மநாதன்(கனடா), லலிதாதேவி, அருள்தாஸ் (ஆசிரியர், யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்), பிரியாளினி(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற இராசம்மா, காலஞ் சென்ற இராசையா (முன்னாள் முகாமையாளர்,மலாயன்கபே, யாழ்ப்பாணம்), மங்கையர்க்கரசி, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் அனிதா, ஜினிதா, கருணராஜ் (கனடா), சுதர்சன், சுஜித்தா, சுபிதா (ஆஸ்திரேலியா), விமலி, மைதிலி, விமலரசன் (கனடா), சிவசொரூபன், சிவதர்சன், சிவசந்திரிகா, சிவரஞ்சிதன், ரகுராஜ், ரகுபிரசாந்த் (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரது மகனின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

51, கோணாவளை வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்,
021-4590245. (69228)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**சில்லையூர் செல்வராசன்** பல்துறைத் திறமையாளன். இலக்கியத் துறையில் சகல பிரிவுகளிலும் முத்திரை பதித்தவர். பெருங்கவிஞர், சங்கநூல் புலமை கொண்டவர். சிறுகதை, நாடகம் மற்றும் இலக்கியக் கட்டுரை என்று பல துறைப் படைப்பாளி. பத்திரிகை, வானொலி, விளம்பரத் துறை என்று ஊடகத் துறையிலும் துலங்கியவர். சிறந்த பாடகர், நடிகரும் கூட. மொத்தத்தில் பல்துறை விற்பன்னர். பல்கலைவேந்தன். தான்தோன்றிக் கவிராயர் என்ற புனைபெயரில் நிறையவே கவிதைகளை எழுதியவர். சுதந்திரன் பத்திரிகையில் ஆசிரியர் பீடத்தில் பணிபுரிந்தவர். விளம்பர ஊடகத்துறையில் கொடிகட்டிப் பறந்தவர்.

"**கதவு திறந்தது**" ஐம்பதுகளில் உருக்கொண்ட தமிழர்களின் அரசியல் எழுச்சியை மையமாகக் கொண்டு அவர் எழுதிய சிறுகதை...

# கதவு திறந்தது

கதவு திறந்தது. ஆபீஸ் பையன் கடிதங்களைக் கொண்டுவந்து மேசையின் மீது வைத்து விட்டுச் சென்றான்.

செல்வநாயகன் ஒரு கடிதத்தைப் பிரித்துப் படித்தான். இதயத்தைப் பிழிந்தெடுத்த சோக சாலைகளிலே தோன்றிய ஒரு கோரப்புன்னகை அவன் கடைக் கோணங்களில் மலர்ந்தது. காதலியின் காரணமில்லாத உள்ளக் குமுறலை எழுத்து வடிவத்திலே பார்த்துச் சிரித்தான். ஆம்! பாக்கியத்தின் கடிதந்தான் அது. 'என்னைக் காதலிப்பதாகக் கூறி ஏமாற்றிவிட்டுப் புது மலர்களிலே மது வருந்துகின்றாயே' என்று கதாபாத்திரம் சொல்வதாக எழுத்தாளர்கள் வரையும் அந்தக் கொடூரச் சொற்கள் கடிதத்தில் இடம்பெறவில்லை. அப்படி எழுதியிருந்தாலும் அதற்கு முக்கியத்துவம் கொடுத்திருக்க மாட்டான்-பெண்களுக்குச் சந்தேகம் இயற்கைதானே என்ற எண்ணத்தால். ஆனால் கடிதத்தில் சிதறிக் கிடந்த அந்தக் கருத்துக்களை அந்த வார்த்தைகளைத்தான் அவனால் சகிக்க முடியவில்லை. கண்கள் மீண்டும் கடிதத்தை நோக்கி அந்த வார்த்தைகளை மறுபடி ஒருமுறை முணுமுணுத்தன- அவன் உதடுகள்,

'நீர் ஒரு புரட்சி மோகன். ஆனால் நான் ஒரு சாந்தகுமாரி. 'பாக்கிய' வாழ்வு வேண்டும் எனக்கு. நீர் தமிழனுக்குச் சிங்கக் கொடி வேண்டாம் எனப் புரட்சிப் பிரசாரம் செய்கிறீர், தனியாட்சி வேண்டும்-தமிழாட்சி வேண்டும் எனக் கோசம் செய்கிறீர்- மேடைகளிலே. ஆனால் நான் அதை விரும்பவில்லை. ஏனெனில் என் தந்தைமுதல் பல தமிழர்கள் வெளியூர்களில் வியாபாரிகள். சிங்களவரின் கையை எதிர்பார்த்துத்தான் நம் ஜீவியம் நடக்கின்றது. கொடி தகாததாயிருக்கலாம். ஆனால் உம் தந்தை போன்ற தமிழ்த் தலைவர்கள் இருக்கத்தக்கதாக நீர்தான் அதற்கெதிராக கிளம்பவேண்டும் என்று அர்த்தமில்லை. ஒரு வார்த்தை; அதுதான் என் கடைசிவார்த்தை. உமது புரட்சியில்காதல் அல்லது உமது குறிக்கோள் இரண்டில் எது வேண்டும்? தோழமையா? விரோதமா?'

அவனது கை விரல்களுக்கிடையே அந்தக் கடிதம் கசங்கியது. ஆனால் அவன் உள்ளம் மலர்ந்தது. அவன் சிரித்தான். முன்பெல்லாம் 'கண்ணே' என்று அன்புடன் தான் அவளை அழைப்பான். ஆனால் இன்று? அவள் உள்ளக் கண் குருடாகி விட்டதே!

* * *

இரவு 12மணி. பாக்கியத்தின் அறையில் விளக்கு அணைக்கப்படவில்லை. அது தன்பாட்டிற்கு எரிந்து கொண்டிருந்தது. பாக்கியம் கட்டிலில் படுத்திருந்தாள். கண்கள் மூடியிருந்தன. ஆனால் உறங்கவில்லை.

கதவு திறந்தது. அவன் வந்தான். அவள் விழித்தாள். அவர்கள் சந்தித்தனர். அவன் மேனகா துஷ்யந்த நாடகம் நடத்திக் காண்பிக்க அங்கு வரவில்லை. தன் வாழ்க்கைப் பிணைப்பிலிருந்து விடுபட அங்கு வந்தான். அவன் சாந்தமாகப் பேசத் தொடக்கினான்.

'நான் எண்ணை; நீ தண்ணீர்; இரண்டும் கலந்து கொள்ளாமல் பிரிந்து தான் இருக்கும். நீ என்போக்கை விரும்பவில்லை!? நான் செய்ய வேண்டியது என்ன என்பதுதான் என் சிந்தனையே தவிர நீயோ பிறரோ அதைப் பற்றி என்ன எண்ணுவீர்கள் என்பதல்ல. நீ விரும்பாததற்குக் காரணம் உன் சுயநலம்.'

வரவர அவன் வார்த்தைகளில் சூடேற ஆரம்பித்தது. அவள் எழுந்து உட்கார்ந்தாள்.

'தந்தை வியாபாரத்தை விட்டுவிட்டால். நடைக்கொரு குலுக்கும், வெளிக்கொரு பகட்டும், விழிக்கொரு சிமிட்டும், மொழிக்கொரு பசப்பும் செய்து உலவ முடியாதல்லவா? ஒரு சிறு தியாகம் செய்ய உன் மனம் ஒப்பவில்லை. சீ! நீ ஒரு தமிழச்சியா? தியாகபூமி என்று புகழப்படும் தமிழ்நாட்டில் பிறந்தவளா நீ?'

கொந்தளித்த கடல் அடங்கியதுபோல அவன் கொதித்த வார்த்தைகள் அடங்கின. அவள் பதிலுக்குப் பத்திரகாளி வேசம் போட வில்லை. வெட்கத்தால் தரையைநோக்கி தாழ்ந்தது அவள் தலை.

'பாக்கியம்! என் தந்தை போன்ற தமிழ்த் தலைவர்கள் யாவரும் பதவிப் பித்தர்கள்! சுயநலவாதிகள்!! பரசிரம ஜீவிகள்!!! ஆகவே என் போன்ற இளைஞர்கள் யாவரும் கிளம்ப வேண்டும். விதை முளை போடுவதற்கு ஒவ்வொரு மழைத்துளியும் உதவி புரியவில் லையா? நீ என்னை எனக்காகக் காதலித்தாய் என்றிருந்தேன். ஆனால்... பாக்கியம்!... என்னை என் கொள்கைக்காகக் கடத்திவிட்டாயே! கடலினும் பெரிது காதல்! ஆனால் காதலிலும் பெரிது கடமை. தமிழனுக்கு உழைப்பது என் கடமை! நான் தோழமை பூண்டுவிட்டேன் பாக்கியம் உன்னோடு அல்ல - கடமையுடன்; என் வாழ்விலிருந்து நீ விடைபெறுகிறாய். போய்வருகிறேன் உன் வாழ்க்கையை விட்டே! வந்தனம் பாக்கியம்!'

மறுபடி கதவு திறந்தது. அவன் வெளியேறினான். அவன் இதயக் கதவும் திறந்தது. அதிலிருந்து அவள் வெளியேறிக் கொண்டிருந்தாள்.

நீர் துளிர்த்த அவள் கண்கள் நிலத்தை நோக்கின. கடிகாரத்தில் டங் என்ற ஓர் ஓசை .நிலத்தை நோக்கிய கண்கள் நிமிர்ந்து நோக்கின. நேரம் பன்னிரண்டரை. அரை நாளிகைக்குமுன் இறுகப் பற்றிக் கட்டி முத்தமிட்டுக் கொண்டிருந்த கடிகாரத்தின் பெரியமுள் சிறிய முள்ளை கீழே வீழ்த்திவிட்டது அவன் அவளை விலக்கியது போல.

மூன்று தினங்களுக்கு முன் செல்வநாயகத்தின் தந்தை அவளிடம் வந்திருந்தார். அவருக்கு அவர்களின் காதலைப் பற்றி நன்கு தெரியும். ஆனால் அவர் அதற்குக் குறுக்கே நிற்கவில்லை. ஏனெனில் அவளொரு பணக் கார வியாபாரியின் மகள். ஆதனம் சீதனம் அபரிமிதமாகக் கிடைக்குமென்ற எண்ணம் அவருக்கு.

வந்தவர் 'அவன் அரசியல் சூழலிலே சிக் கிச் சிதையப் போகிறான். அவன் மனதை நீதான் மாற்றிவிட வேண்டும்' என்றார்- பாக்கியத்திடம்.

'அவர் உறுதிபடைத்த நெஞ்சராகிற்றே' அவள் சந்தேகக் குரலில் கேட்டாள்.

'மாற்றவழியுண்டு பாக்கியம். நீ ஒன்று செய். அவன் தனது போக்கை மாற்றிக் கொள்ளாவிடில் நீ அவனைக் காதலிக்க முடியாது என்று சிறிது கடூரமாக ஒரு கடிதம் வரைந்துவிடு. பிறகு பையன் உன் காலடியில் வந்து விழுந்து விடுவான்.'

சிக்கலைக் குலைப்பதற்கு அவர் கூறிய வழி இது. அவளும் இயைந்து விட்டால் கடிதம் என்ற கத்தி, அவர்களின் வாழ்க்கையைப் பிணைத்திருந்த காதற் கயிற்றை அறுத்துவிடும்.

மறுபடியும் 'டாங்' என்ற அந்த ஓசை; அவள் சிந்தனை உலகிலிருந்து விடுபட்டாள். நிமிர்ந்தாள்; ஒரு மணி .

இன்னும் 5 நிமிடங்களில் அந்த ஊசிகள் மறுபடியும் ஒன்று சேர்ந்துவிடுமே! ஆனால் அவனும் அவளும்? அந்த ஊசிகள் ஒன்று சேருவதை ஆசையுடன் பார்த்தாள். ஆனால் ஒன்றும் தெரியவில்லை. ஏனெனில் இருள் சூழ்ந்து விட்டது காரணம்? கவனிப் பாரற்று எரிந்து கொண்டிருந்ததால் எண்ணை தீர்ந்து போய்விட, விளக்கு அணைந்துவிட்டது- அவ்ள் வாழ்க்கையைப் போல; கண்ணில் துளிர்ந்த நீரை அவள் துடைத்துக் கொண்டது, அந்த இருட்டில் யாருக்குத் தெரியப் போகிறது.

* * *

நாயகத்தில் தந்தை, பாக்கியத்திடம் உதவிக்குச் சென்றதற்குக் காரணங்கள் இல்லாமலும் இல்லை.

அதோ அவன் மேடையில் நின்று சிங்கத்துக்கு எதிராக கிளம்ப வேண்டுமென்று சிங்கம்போல் கர்ச்சிக்கிறான். ஆம்! செல்வநாயகன் தான்.

ஆனால் கூட்டம் தடுக்கப்படுகின்றது. தடை உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. தடுப்பவர்கள் ஜனநாயக அரசாங்கத்தவர்கள்; ஆட்சி பீடத்தவர்களின் பிரதிநிதியாக ஒரு தமிழன் தான் கூட்டத்தை தடுக்க வந்திருந்தான். தமிழன் கையாலேயே அவன் தொண் டையை நெரிக்கும் தந்திரம் இது. பின்பு நாம் துரோ கம் செய்யவில்லை. உங்கள் இனம் உங்களைக் காட்டிக் கொடுத்தது என்று அரசாங்கம் காரணம் காட்டலாமல்லவா?

கூட்டத்துக்கு தடைபோட வந்த 'தரகர்' வேறு யாருமில்லை செல்வநாயகத்தின் தந்தை தான். கூட்டம் கலைகிறது. தந்தையையும் மைந்தனையும் தவிர.

'குடும்பப் பெயரைக் கெடுக்க புல்லுருவிகளுடன் சேர்ந்து கூச்சலிடுகிறாய்.'

'குறியில்லாத கூக்குரல் கொள்கையில்லாத கூச்சல்-நீங்கள் போடுவது.'

'தமிழ்த் தலைவன் சீர்திருத்தவாதி என்று ஊர் பூராவும் உங்களைப் பற்றி பேசுகின்றனரே! சீர்திருத்தவாதியின் வாயிற் சிந்தும் சொற்களா இவை?'

'சீர்திருத்தம் ஊருக்கு! நமக்கல்ல' உனக்காக நான் என் பதவியை விட்டுவிடுவதா? வேண்டாம் நாயகம் நான் தந்தை என்ற கோதாவிற் கூறுகிறேன், அரசியல் மேடையில் தந்தை, மகன் என்ற பேதம் பாராட்ட முடியாது. நீ கைது செய்யப்படுவாய். "நானே கைது செய்ய வேண்டி ஏற்பட்டுவிடும். என் கடமை அது. நீ உன் பாதையிலிருந்து விலகிக்கொண்டால்தான் உனக்கு நன்மை."

'இல்லை நீங்கள் உங்கள் பதவியிலிருந்து விலகிக்கொண்டால் தான் தமிழனுக்கு நன்மை.'

இது தந்தைக்கும் மகனுக்குமிடையில் நடந்த உரையாடல். இப்போது அவன் போய்விட்டான். தந்தையின் மனக்கதவு திறந்தது. கடமை, பாசம் என்ற இரு பயில்வான்களும் உள்ளே சென்று மற்போர் நடத்தினர். பாசம் சிறிது தலைதூக்கியது.

'காதலின் முன்னே தேசபக்தி பறந்துவிடும்' என்று எண்ணினார் நாயகத்தின் தந்தை. இது தான் அவர் அவளிடம் சென்று உதவி கோரியதற்கு காரணம். ஆனால் அவர் எதிர்பார்த்ததற்கு மாறாக விஷயங்கள் நடந்து விட்டன. அவன் தன் காதலைத் தியாகம் செய்துவிட்டான் என்று அறிந்ததும் அவருடைய மனம் கல்லாகிவிட்டது. அவரும் தன் பாசத்தை தியாகம் செய்து விட்டார்.

* * *

அன்று அவனுடைய கட்சி மாநாடு . அறிஞர்கள் பேசினார்கள். அவனும் பேசினான்.

'மொழி ஒரு நாட்டின் விழி! அதை உயர்த்த வழி தமிழரசு ஒன்றுதான். ஆனால் நாம் கோடிட்ட ஒரு குட்டிச் சிங்கக் கொடியை மண்டியிட்டுக் குடங்கிக் கிடக்கிறோம். அடிமையாக்கும் கொடி, அருகில் கோடிட்ட கொடி, அருவருக்கத் தகுந்த கொடி நமக்கு வேண்டாம். உங்கள் முன் இரண்டு வழிகள்! ஒன்று நிபந்தனையற்ற சரணாகதி! மற்றொன்று புரட்சிப் புதுவழி.

(06ஆம்பக்கம் பார்க்க..)

# மனச்சோர்வும் ஒருவகை வியாதியே மருத்துவரிடம் சிகிச்சை பெறுவது அவசியம்

**வினா 1-** எனது நண்பி(வயது 14) பல நாள்களாக மற்றைய பிள்ளைகளுடன் சண்டை பிடித்துக் கொண்டே இருக்கிறார். அவருக்கு தயவுசெய்து ஆலோசனை கூறவும்?

**வினா 2-** எனது நண்பிக்கு(வயது 12) சில நாள்களாக என்ன கூறினாலும் உடனே கோவப்படுகிறார். இதற்கு யாது செய்ய வேண்டும்?

**வினா 3-** எமது பாடசாலை அதிபர் அடிக்கடி கடுமையாக கோபப்பட்டு மாணவர்களைப் பேசி அடிக்கிறார். இது மாணவர்களின் மன உளைச்சலை மேலும் அதிகரிக்கச் செய்கின்றது. இது பற்றி உங்கள் கருத்து வரவேற்கப்படுகின்றது.

**வினா 4-** பெண், (வயது 18) சிறிய விடயத்திற்கும் விரக்தி, கோபம் ஏற்படக் காரணத்தினையும், அதற்கான தீர்வையும் கூறுங்கள்?

விடை - இந்தக் கேள்விகளில் எல்லாம் இருக்கின்ற பொதுவான விடயம், சிறிய விடயங்களுக்குக் கோபப்படுதல் என்கின்ற ஒன்றுதான்.

கோபம் என்பது சாதாரணமான ஒரு உணர்ச்சி வெளிப்பாடுதான். அது பல சந்தர்ப்பங்களில் ஏற்பட்டாலும், சிலவேளைகளிலேயே அவை வெளிக்காட்டப்படுகின்றன. சில வேளைகளில் அவை மறைக்கப்பட்டு விடுகின்றன.

கோபம் என்கின்ற உணர்வை எவ்வாறு வெளிப்படுத்துவது என்பது மிகவும் முக்கியமானது. பல உணர்வுகளைப் போலவே, கோபமும் அதிகரிக்கின்றபோது எமது உடலிலும், உள்ளத்திலும் மாறுதல் ஏற்படுகின்றது. உதாரணமாக எமக்கு மூச்சு வாங்குகின்றது. இதயம் வேகமாக அடிக்கின்றது, தசைகளில் இறுக்கம் கூடுகின்றது, வியர்க்கின்றது, மனம் அமைதியின்மையில் தவிக்கின்றது, நிதானமாக யோசிக்க, ஆராய்ந்து முடிவுகள் எடுக்க முடியாமல் இருக்கின்றது. இந்த மாற்றங்கள் அநேகமான சந்தர்ப்பங்களில் எங்களது சாதாரணமான தொழிற்படும் ஆற்றலைக் குறைத்து விடும். அத்துடன் கோபம் அதிகமாகின்ற பொழுது நாங்கள் வெளிக்காட்டுகின்ற நடத்தைகள் (அடித்தல், உடைத்தல், பேசுதல், ஏசுதல்) பல சமயங்களில் விரும்பத்தகாத உறவுச் சிக்கல்களையும், பிரச்சனைகளையும் கொண்டு வந்து விடும். இது மிகவும் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று.

ஆகவே, கோபம் ஏன் ஏற்படுகின்றது? அதனுடைய நியாயத்தன்மை என்ன? என்ற கேள்விகளுக்கு மேலால், நாம் கோபப்படும் போது எப்படி நடந்து கொள்கின்றோம்? அதனுடைய பலாபலன்கள் என்ன? என்பதனைச் சிந்திக்கத் தலைப்படுதல் நல்லது.

அத்துடன் கோபம் ஏற்பட்டால் அதனை எவ்வாறு பொருத்தமான வழிகளில், மற்றவர்களைத் துன்புறுத்தாத வகையில் வெளிப்படுத்தலாம், என்று யோசித்துப் பார்த்தல் மிகவும் பிரயோசனமானது. நாம் சற்று நிதானித்து யோசித்தால், எமக்குத் தேவையான விடைகளும், தீர்வுகளும் எம் கண் முன்னேயே இருப்பதனை உணர்ந்து கொள்ளலாம். இனி மறுபடியும் கேள்விகளுக்கு வருவோம்.

சுகநலம்

ஒருவர் அடிக்கடி, சிறிய விடயங்களுக்கெல்லாம் கோபிப்பதும், எரிந்து விழுவதும், மற்றவர்களைத் துன்புறுத்துவதுமாக இருந்தால் அவருடைய மனதில் ஏதோ சில பிரச்சினைகள் இருக்கின்றன என்றோ, அவரது உள ஆரோக்கியம் சற்றுப் பாதிப்படைந்து இருக்கின்றது என்றோ நாம் கருதலாம். அவர்களுக்கு உண்மையில் உளவியல் உதவி தேவைப்படுகின்றது.

இவ்வாறானவர்கள் தாமாகவே ஒரு நம்பிக்கைக்குரிய நண்பரையோ, உளவளத் துணையாளரையோ, அல்லது உள மருத்துவப் பிரிவினரையோ தொடர்புகொண்டு தங்களுடைய 'உண்மையான' உளப் பிரச்சனைகளைப் பற்றிக் கதைத்தல், ஆராய்தல், விழிப்புணர்வு பெறுதல் முக்கியமானது.

**வினா 5 –** திரு.வ.சி, ஓய்வுபெற்ற அரச ஊழியர், வயது 77, இந்து, தாவரபோசனம் நான் நன்கு சாப்பிடுகிறேன், உடல் நலம் நன்றாக இருக்கின்றது. சிலகாலமாக மனப்பதட்டம், அவநம்பிக்கை, மனச்சோர்வு, எதிர்மாறான சிந்தனை, மனப்பயம், கிலேசம் எதுவும் செய்யமுடியா[illegible] ஏற்பட்டுள்ளது. மனம் [illegible] எதிர்மாறான சிந்தனைகளாகக் காணப்படுகின்றன. (மூளை நரம்புக் கோளாறு, மனப்பயம், கிலேசம், கெடுதல் பற்றிய சிந்தனைகள்). தினம் தியானத்தின் மூலம் மனதைக் கட்டுப்படுத்துகின்றேன். எவரிடம் எவ்வாறு வைத்தியம் செய்யலாமென தடுமாற்றமாக இருக்கிறது. ஆகவே உங்கள் உதவியை மிகவும் அவசியமாக எதிர்பார்க்கிறேன்.

விடை - ஐயா, உங்களுடைய முறைப்பாடுகள் உங்களுக்கு மனச்சோர்வு வந்து விட்டதைக் காட்டி நிற்கின்றது.

மனச்சோர்வு என்பது ஒரு வகையான, மிதமான உளநோய்தான். இது ஏற்பட்டிருக்கும் வேளைகளில் எமது மனம் அடிப்படையில் கவலையினால் நிரம்பியிருக்கும். விரக்தியும், வெறுப்பும் மேலோங்கும். அடிக்கடி அழுகை வரும். கவலையான சிந்தனைகள் ஏற்படும். வாழ்க்கையில் ஏற்பட்ட பழைய தோல்விகள், கசப்பான அனுபவங்கள் எல்லாம் ஞாபகத்திற்குவரும். மனம் ஒன்றிலும் ஈடுபடாது. தனிமையில் இருக்க வேண்டும் என்ற உணர்வு ஏற்படும். எதிர்காலம் இருள் மயமாகக் காணப்படும். உடலிலும், மனதிலும் ஒரு "இயலாமை" தோன்றும். நித்திரையில் குறைபாடு, பசியின்மை ஏற்படும். எமக்கு முன்பு பிடித்த விடயங்களே பிடிக்காமல் போகும். மொத்தத்தில் மனச்சோர்வு எமது சந்தோசத்தை இல்லாது செய்துவிடும். சிலவேளைகளில் ஏன் உயிருடன் இருப்பான்? என்ற எண்ணமும் தலைதூக்கும்

"மருத்துவ ஆலோசனை"
சமுதாய மருத்துவத்துறை,
மருத்துவ பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

மேலே கூறப்பட்டவை மனச்சோர்வினுடைய சில பொதுவான அறிகுறிகள். மனச்சோர்வு வயது வித்தியாசமின்றி, பால் வித்தியாசமின்றி அனைவரிலும் ஏற்படக்கூடியது.

சில வேளைகளில் மனச்சோர்வானது எமக்கு ஏற்படுகின்ற ஒரு இழப்பைத் தொடர்ந்து (உ[illegible]பிரிழப்பு, பொருளாதார இழப்பு, வேலையிழப்பு, மானஇழப்பு...) ஏற்படக்கூடும். ஆனாலும், மனச்சோர்வு என்பது எவ விதமான புறக்காரணிகளும் இன்றி, அகக் காரணிகளின் மூலம் தானாகவே தோன்றக் கூடியது என்பதனையும் அறிந்து கொள்ளுதல் அவசியமானது.

மனச்சோர்வானது ஒருவருடைய தொழிற்படும் ஆற்றலைப் பாதித்து வாழ்க்கையின் தரத்தைக் குறைத்துவிடும். இந்நோயுடையவர்கள் சிலவேளைகளில் வாழ்க்கையில் பிடிப்புப் போய், விரக்தி கூடி, தற்கொலையை நோக்கியும் செல்லலாம்.

எனவே மனச்சோர்வுக்குச் சிகிச்சை அவசியமானது. இந்நோய் மாறக்கூடியது. மருந்துகள் பாவித்த சில வாரங்களிலேயே, மன நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

மனச்சோர்வுக்குச் சிகிச்சை பெறுவதற்குக் கட்டாயம் உள மருத்துவரைத்தான் நாட வேண்டும் என்றில்லை. எல்லா மருத்துவர்களாலும் மனச்சோர்வை அடையாளங்கண்டு சிகிச்சையளிக்க முடியும்.

மனச்சோர்வுக்கு ஆளானவர்கள் செய்ய வேண்டியது தமக்குப் பிடித்தமான வைத்தியரிடம் சென்று, தங்களது முறைப்பாடுகளைக் கூறுவதே. மனச்சோர்வைப் பற்றி மேலும் அறிய விரும்பினால் உங்களுக்குத் தெரிந்த ஒரு உளவளத்துணையாளரை நாடலாம். ஒருவரும் 'அகப்படாவிட்டால்' அண்மையில் உள்ள ஒரு உள மருத்துவ சிகிச்சைப் பிரிவை நாடவும்.

உங்கள் கேள்விகளுக்கு மருத்துவ நிபுணர்கள் பதில் தருகிறார்கள்

கீழ்கண்ட முகவரிக்கு கடித மூலமாகவோ, தொலைபேசி எண்ணுக்கு SMS மூலமாகவோ தொடர்புகொண்டு உங்கள் வினாக்களை பதிவு செய்யலாம். அத்துடன் அருகில் காணப்படும் சின்னத்துடன் எம்மால் நிறுவப்பட்டுள்ள வினா சேகரிப்பு பெட்டிகளில் உங்கள் வினாக்களை இடுவதன் மூலமும் அவை எம்மை அடைவதை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும். உங்கள் கேள்விகளும் பதில்களும் பிரதி ஞாயிறு தோறும் உங்கள் உதயனில் பிரசுரமாகும்..


*(உங்கள் வினாக்களில் வயது, பால் என்பன கட்டாயம் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.)*

*மருத்துவ ஆலோசனை*
மருத்துவபீடம், ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி. *T.P:0777 179268*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துச் சிதம்பரத் தேர்த்திருவிழாச் சிறப்பு மலர்

# காரைநகர் சிவன்கோயில் - 23.12.2007



## தில்லைக் கூத்தனின் அருங்காட்சி மக்களை ஆற்றுப்படுத்தும்



ஈழத்திருநாட்டின் தொன்மைக்கும் பெருமைக்கும் சிவாலயங்கள் சான்றாக அமைகின்றன.

மக்களை நல்வழிப் படுத்துவதில் ஆலயங்கள் ஆற்றும் பணி மகத்தானது. அந்தவகையில் என்னை முதன் முதலில் நாடாளுமன்றத்திற்கு அனுப்புவதற்குப் பேருதவி புரிந்த புண்ணிய சீலர்கள் வாழும் காரைநகரில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஈழத்துச் சிதம்பரத்து சுந்தரேஸ்வரப் பெருமான் ஆலயத்தின் சமய, சமூக, கலாசாரப் பணிகள் போற்றுதற்குரியன.

துன்பத்திலும் துயரத்திலும் மூழ்கியிருக்கும் மக்களுக்கு இன்று தேரேறி வரும் தில்லைக் கூத்தனின் அருங்காட்சி ஆறுதல் அளிப்பதாக, ஆற்றுப்படுத்துவதாக அமையும்.

ஜனா சிற்பக் கூட சிற்பாசாரியார் ஜெயகாந்தன் தலைமையில் ஈழத்து, இந்திய சிற்பாசாரியர்களின் கைவண்ணத்தில் ஈழத்திலேயே மிக உயர்ந்த சிற்பத் தேராக நடராஜப் பெருமானுக்கு கடந்த வருடம் ஒரு தேரும் ஐயனாருக்கு இந்த வருடம் ஒரு தேருமாக இரண்டு சிற்பத் தேர்களை அமைப்பதற்கு தில்லைக் கூத்தன் அருள் பாலித்தமையை எண்ணி வியந்து நிற்கிறேன்.

இன்று இந்த இரண்டு சிற்பத்தேர்கள் உட்பட ஐந்து தேர்களில் எம் பெருமான் பவனிவரும் காட்சியை ஈழத்து மக்களில் பெரும்பான்மையானோர் கண்டுகளிப்பர்.

இரண்டு சிற்பத் தேர்களையும் வடிவமைத்த சிற்பாசாரியார் ஜெயகாந்தனுக்கும் ஏனைய சிற்பக் கலைஞர்களுக்கும் பொருள் உதவி வழங்கிய புரவலர்களுக்கும் அடியார்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் எனது உள்ளம் நிறைந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வெகு விரைவில் எம்பெருமான் ஆலயம் கருங்கல் சிற்ப வேலைகளுடன் மிளிர இறையருளை வேண்டிநிற்கிறேன்.

**தி.மகேஸ்வரன்**
முன்னாள் இந்துகலாசார அலுவல்கள் அமைச்சர்,
கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர்,
கொழும்பு மாவட்டம்.

ஈழத்துச் சிதம்பரத்தில் இன்று இரதோற்சவம் சிறப்பாக நடைபெறுகிறது. கடந்த ஆண்டில் புதிதாக அமைக்கப்பட்ட 39 அடி உயரமான சிற்பத் தேரில் நடராஜப் பெருமானும் இந்த வருடம் புதிதாக அமைக்கப்பட்டு நேற்றைய தினம் வெள்ளோட்ட விழா நடைபெற்ற புதிய சிற்பத்தேரில் ஐயனாரும், ஏனைய மூன்று தேர்களிலும் முறையே பிள்ளையாரும் முருகனும், சிவகாம சுந்தரியும் மற்றும் மணிவாசகப் பெருமானும் பஞ்சரதங்களிலும் பவனி வரும் காட்சி அருட்பெருங் காட்சியாகும்.



பஞ்சரத பவனியில் இரண்டு புதிய சித்திரத் தேரங்களும் இணைவதால் இம்முறை நடைபெறும் இரதோற்சவ விழா மிக அற்புதமாக அமைகிறது.

அந்தணர்கள் வேதமும், அடியார்கள் திருமுறையும் ஓத பக்தர்கள் பஜனை பாட, சங்கு முழங்க, சேமக்கலமும் மேள வாத்தியங்களும் ஒலிக்க, செவ்வந்திப் பூக்களாலும் திருவாபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்ட நடராஜப்பெருமான், திருநடனம் ஆடிக் கொண்டு சிவகாமசுந்தரி அம்மையாருடனும் ஏனைய பரிவார மூர்த்திகளுடனும் தேருக்கு எழுந்தருளும் காட்சி கண்கொள்ளாக் காட் சியாகும்.

ஈழத்தின் எந்தக் கோயிலிலும் இல்லாதவாறு இங்கு தில்லைக் கூத்தன் தனது பரிவார மூர்த்திகளுடன் திருநடனமாடி வரும் காட்சி அற்புதமானது. இந்த அற்புதக் காட்சிகளைக் கண்குளிரக் காணும் பக்தர்கள் உள்ளம் புளகாங்கிதமடைந்து மெய் சிலிர்த்து வாய் அரோகரா! அரோகரா! தில்லைக் கூத்தனுக்கு அரோகரா! தென்பாண்டி நாட்டானுக்கு அரோகரா! என்று முணுமுணுக்க ஆனந்தக் கண்ணீர் வடித்து சிலர் பக்தியின் உச்சிக்கே சென்று தாமும் ஆனந்தக் கூத்தாடிப் பேரானந்தத்தில் திளைத்து நிற்பர்.

ஈழத்துச் சிதம்பரத்தில் தேரோடும் வீதி மிகப் பிரமாண்டமான பரந்த வெளியிலே அமைந்துள்ளது. கடந்த சில நாள்களாகப் பெய்து வரும் கார்கால மழையினால் பெரும் வெள்ளக் காடாகக் காட்சி தருகிறது. நடராஜப் பெருமானும் ஏனைய பரிவார மூர்த்திகளும் பஞ்சரத பவனியாக வெள்ளம் நிறைந்த வீதியிலே வலம் வரும் காட்சி ஆனந்தமாக, அற்புதமாக இருக்கும்.

ஈழத்துச் சிதம்பரம் என்று ஏற்றிப் போற்றப்படும் காரைநகர் சிவன்கோயில் வரலாறும் வளர்ச்சியும் மிகச் சிறப்புடையவை. தென் னிந்தியாவிலே புகழ்பெற்ற சிவத்தலமான சிதம்பரத்திலே பின்பற்றப்படுகின்ற கிரியை மரபுகளைப் பின்பற்றும் பாரம்பரியம் காரணமாக இக்கோயில் ஈழத்துச் சிதம்பரம் என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றுள்ளது.

ஆதியிலிருந்தே 'ஈழத்திற்கும் தமிழ் நாட்டிற்குமிடையே நெருங்கிய தொடர்புகள் காணப்பட்டுள்ளன. 'சோழநாட்டிலிருந்து கி.பி.436 ஆம் ஆண்டளவில் இலங்கைக்கு வந்து சைவத்திருப்பணிகள் செய்த குளக்கோட்டு மன்னன், காரைநகரில் வியாவில் என்னும் இடத்தில் சோழர் கால சிற்ப முறைப்படி ஐயனார் கோயிலைக் கட்டுவித்தான். காரைநகரில் முதன் முதலில் அமைக்கப்பட்ட திருக்கோயில் இதுவெனக் குறிப்பிடுவர்.

கி.பி.1658 இல் வியாவில் ஐயனார் ஆலயம் இடித்து தரைமட்டமாக்கப்பட்டது. ஒல்லாந்தரால் இக் கோயிலில் இருந்த கற்களைக் கொண்டே 'கமன் கீல' என்று அழைக்கப்படும் கடற்கோட்டை புதுப்பித்தும் பெருப்பித்தும் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஒல்லாந்தரால் இடித்து அழிக்கப்பட்ட வியாவில் ஐயனார் மூலவிக்கிரகம் யாரோ ஓர் அன்பரால் திண்ணைக்களிக்கு எடுத்து வரப்பட்டு அரச மரத்திற்கண்மையில் புதைத்து வைத்திருக்கலாம் என்றும் தமிழகத்தில் இருந்து வந்த ஆண்டி என்னும் பெரியார் வியாவில் ஐயனார் ஆலயத்திற்குச் சென்றபோது ஆலயம் அழிக்கப்பட்டிருப்பதையும் ஐயனாரை வழிபடமுடியாது போனமையை எண்ணி வருந்திய போது ஐயனார் திருக்குறிப்பினால் திண்ணைகளிக்கு விரைந்து அங்குள்ள அரசமரத்துக்கு அருகில் ஒளி தெரிந்த இடத்தைத் தோண்டியபோது ஐயனார் விக்கிரகம் கண்டெடுக்கப்பட்டதாகவும் அந்த மூலவிக்கிரகமே இன்று ஈழத்துச் சிதம்பரத்தில் உள்ள ஐயனார் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இன்று ஈழத்துச் சிதம்பரத்தில் நடைபெறும் இரதோற்சவத்தைக் கண்டுகளிக்க வரும் பக்தர்களுக்கு எம்பெருமான் திருவருள் கிடைக்க எல்லாம் வல்ல எம்பெருமான் திருவருளை வேண்டி நிற்கிறோம்.

**நடராசா கணேசமூர்த்தி,**
ஆசிரியர், கலாநிதி. ஆ. தியாகராசா ம.ம.வித்தியாலயம்.

## தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்;


மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள் மற்றும் பல்பொருள் வாணிபம் விமான மூலமும் கப்பல் மூலமும் கொழும்பில் இருந்து சகல பொதிகளும் (கொழும்பு- யாழ்.ரான்ஸ்போட் ஏஜென்ட்) யாழ்ப்பாணத்திற்குத் துரிதகதியில் அனுப்பி வைக்கப்படும்.
MAHALUXMY STORES
212, Stanley Road, Jaffna.
T.P.: 021- 2024, 2025, 2134.

தேரேறி அடியவர் தம் வல்வினை போக்கும் ஈழத்துச் சிதம்பரத் தில்லைக்கூத்தன் கழல் போற்றும்
இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்
இல. 50, 52, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

திருமணப் பட்டுச் சேலைகளின் சோலை
மகாராணி பட்டுச் சோலை
50, பெரியகடை, யாழ்ப்பாணம்.
2223104.

இளவரசி சேலைச்சோலை
(பட்டுப்புடவைகளின் சாம்ராஜ்யம்)

ELAVARASI TEXTILE
(Specialist in Wedding Sarees)
57, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
57, New Market, Jaffna.
T.P.: 021-2222503

திருமணப் பட்டுப் புடவைகளின் சாம்ராச்சியம்
சிவகணேசன் ஸ்ரோர்ஸ்
(அழகிய ஜவுளிகளின் இல்லம்)
41, பெரியகடை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 2063

Thirumarugan Com Net
Commurication & Computer Systems Office
259, K.K.S.ROAD, JAFFNA.
Hot Line 0777 554528
Tel- 021 222 7835 Fax- 021 222 7836
E.mail:- thirumuruglan@lycosmail.com

தரம்3முதல் A/L வரை வகுப்புகள் நடைபெறுகின்றன
ஐடியல் அக்கடமி
காரைநகர், சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம்.
தரம் 6,7,8 ஆங்கில மொழிமூல வகுப்புகள் நடைபெறுகின்றன.

கலைமகள் வர்த்தக நிலையம்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்,
021- 222 2410


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# ஆசிரியருக்கு உளவளத்துறைப் பயிற்சி கட்டாயமாக்கப்படுதல் அவசியம்

ஆசிரியர்கள் உளவளத் துறையில் பயிற்சி பெற வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. வடமராட்சியில் நடைபெற்ற உளவளத்துறைப் பயிற்சி நெறியினை ஆரம்பித்து வைத்துப் பேசிய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் இதன் முக்கியத்துவத்தை விரிவாக எடுத்துரைத்துள்ளார்.

கடந்த கால் நூற்றாண்டு காலமாகத் தமிழர் பிரதேசங்களைக் கவ்விப் பிடித்துள்ள போர், மக்களின் வாழ்க்கையை எல்லாவகைகளிலும் பாதிப்புறச் செய்துள்ளது; அவர்களின் வாழ்வியல் ஆதாரங்களை ஆட்டம் காண வைத்து நலிவடையச் செய்துள்ளது.

அதற்கு முக்கிய காரணிகள் பல. அவற்றில் குறிப்பிட்டுக் கூறக்கூடியவற்றில் ஒன்று மக்களின் மனவளம் - உளவளம் - பாதிப்புறுவதாகும். ஆரோக்கியமான நிறைவான வாழ்க்கைக்கு ஆதாரமாக இருப்பது ஒவ்வொருவரின் மனநிலையுமே ஆகும். மனநிலை தளம்பினால், உளவளத்தில் கீறல் விழுந்துவிட்டால், சம்பந்தப்பட்டவரின் வாழ்க்கை பாதிப்புற்றுவிடும். சில வேளை பாழ்பட்டும் போய்விடக்கூடும்.

மனித உடற்கூறுகளில் இருதயத்திலும், மூளையிலும் பாதிப்பு ஏற்பட்டுவிட்டால், பலவகையான பக்கவிளைவுகள் வந்து சேரும்; ஒன்றுகூடும். ஒருவரின் எண்ணங்கள், விருப்பங்கள் நிறைவேறாத போது அல்லது அவை கிடைக்காது என்ற நிலை வந்துவிட்டால் ஏமாற்றம் அல்லது தவிப்பு என்ற நிலையில் மனச் சோர்வு உண்டாகிறது. அது மனநலம் பாதிக்கப்படுவதன் முதற் கட்டம் என்றால், உளவளம் சிதைவடைந்து போவது - அதாவது மன நலம் குன்றிப் போவது - சம்பந்தப்பட்டவரின் வாழ்க்கையையே மாற்றி இருள் சூழச்செய்கிறது.

ஒரு காலத்தில் மனவளம் - உளவளம் - பாதிக்கப்படுபவர்களை புறமொதுக்கி வைத்து - அதற்கு வைத்தியம் இல்லை என்று கூறி உறவுகளே ஒதுக்கிவிடும் பரிதாபகரமான நிலை - விரும்பத்தகாத போக்கு - எம்மிடையே காணப்பட்டது. இப்போது அந்த நிலைப்பாட்டில் மிகப்பெரிய அளவில் மாற்றத்தைக் காணமுடிகிறது.

வைத்தியத்துறையின் முன்னேற்றமும் இத்துறைசார் மருத்துவர்களின் நற்சேவையும் உளவள மேம்பாட்டு அமைப்புகளின் சேவைகளும், உளவளத் துணையாளர்களின் சேவையும் மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் அதிலிருந்து விடுபட்டு மற்றவர்களைப் போன்று சாதாரண வாழ்க்கையை பழுதின்றிச் சீராக மேற்கொள்ள வழிசெய்துள்ளது.

வயது வந்தவர்களை விட, இளம்பராயத்தினரே சிறிய பாதிப்புகளாலும் மனச்சஞ்சலமுற்று மனச்சோர்வுக்கு ஆளாவது இயல்பு, வழமை. சிறிய உளத்தாக்கங்களும் அவர்களைப் பெரிதும் பாதிக்கின்றன. போரில்லாத முந்திய காலத்தைவிட, கடந்த 25 வருடங்களாக போர்முடிவில்லாமல் நீடித்து வருவதால், எமது இளசுகளின் - மாணவர்களின் - இளைஞர்களின் மனநலம் அச்சத்தினாலும் அதிர்ச்சிகளாலும் பாதிக்கப்படும் வீதாசாரமும் விகிதாசாரமும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

யாழ்ப்பாணத்தின் இன்றைய சூழ்நிலையில் பல்வேறு காரண காரியங்களால், என்றுமே இல்லாத வேறுபட்ட அச்சம் நிறைந்த வாழ்க்கை நிலையில் இளசுகளின் உளவளம், மனநலம் மிகப்பெரிய அளவில் பாதிப்புறும் அபாயம் உருவாகியுள்ளது.

குறிப்பாக மாணவர்கள் மத்தியில் விரும்பத்தகாத இந்தப் பாதிப்பு, பெருத்து வருவதாகவும் பெற்றோர்கள் கவலைப்படுகிறார்கள்.

இந்தவகைப் பாதிப்பு பெருகிவிடாமல் ஓரளவிலேனும் தடுப்பு அணை போடுவதற்கு ஆசிரியர்கள் உளவளத்துறையில் பயிற்சிபெறுவது அவசியம். அரசாங்கம் வகுக்கும் பாடத்திட்டத்திலோ அல்லது போதனை முறைகளிலோ இத்தகைய பயிற்சி குறித்து இல்லாவிடினும், எமது எதிர்காலச் சந்ததியினரின் பெரும் நன்மைகருதி, ஒவ்வொரு ஆசிரியரும் உளவள ஆலோசனையாளர்களாக மாறவேண்டும்.

ஆசிரியர்களுக்கு கருத்தரங்குகள் மூலம் உளவளத்துறைப் பயிற்சி வழங்குவதில் எமது பிரதேச சுகாதாரத்துறையினரோடு கல்விப்புலத்தினரும் ஒன்றிணைந்து செயற்படுவது நல்ல அறிகுறியாகும்.

வெள்ளம் வருவதற்கு முன்னர் அணை கட்டியாக வேண்டும். எங்கள் வருங்காலச் சந்ததியினரை இன்றைய பீதி நிறைந்த வாழ்வியல் சூழ்நிலையால் பாதிப்புறாமல் பாதுகாக்கும் பணியில், ஆசிரியர்களுக்கு பெரும் பங்கு உண்டு. பாடபோதனை போன்று உளவியல் போதனைக்கும் சமபங்கு தரவேண்டிய காலம் இது. இதனை எதிர்காலச் சமூகத்துக்கு செய்யும் தொண்டாகக் கருதிச் சேவையாற்ற வேண்டுகிறோம்.

ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கும் போது, உளவியலும் ஒரு பாடமாகப் போதிக்கப்படுவது உண்டு. மாணவனின் மன நிலை அறிந்து, அளந்து கல்வி புகட்டப்பட வேண்டும் என்பது அதன் பிரதான நோக்கமாகும். எனினும் பல சந்தர்ப்பங்களில் ஆசிரியர்களால் அது கைக்கொள்ளப்படுவதில்லை என்ற பெருங்குறைபாடு உண்டு.

அதற்கும் மேலாக உளவளத்துறைப் பயிற்சி எமது பிரதேச ஆசிரியர்களுக்கு மிகவும் இன்றியமையாததாகும். அந்த வகையில் சுகாதாரப் பகுதியினர் மேற்கொண்டுள்ள முயற்சி வரவேற்கத்தக்கது.

ஆயினும் உளநலம் பாதிப்புறாமல் மாணவர்களுக்கு ஆலோசனை வழங்குவது பாடவிதானத்தில் சேர்க்கப்பட்டு கட்டாயமாக்கப்படுவது மேலும் ஆக்கபூர்வமானதாக அமையும்.

இன்றைய காலச்சூழலில் அது இன்றியமையாததாகும்.

# மாதங்களில் சிறந்த மார்கழியில் வரும் திருவாதிரை
# சிவனின் திருநடனம் கண்டு பிறவிப் பயன் பெறுவோம்

சிவபெருமான் ஆலயங்களில் திருவிழாக்கள் அவ்வவ் கோயில்களின் வரலாறு பற்றியோ, மாதத் தில்வரும் திதி அல்லது நட்சத்திரம் பற்றியோ நடை பெறுவது வழக்கம். சிவபெருமானின் ஆனந்தத் தாண்டவம் ஆடும் மூர்த்தமே



நடராஜமூர்த்தம். சிவன் கோயில்களில் தெற்குத் திசை நோக்கி நடேசர் கோயில்கள் இருக்கும். உலக இயக்கமே நடராஜ தாண்டவத்தில் விளக்கப்படுகிறது. நடராஜர் பாம்பை ஆபரணமாக அணிந்தவர். யானைத் தோலைப் போர்வையாகப் போர்த்துள்ளவர். டமருகம், மான், அக்கினி ஆகியவற்றைக் கரங்களில் ஏந்தி முயலகனை வலது காலால் மிதித்து இடது காலைத் தூக்கி நர்தனமாடிய நட்சத்திரமே ஆருத்திரா என்று சமஸ்கிருதத்தில் அழைக்கப்படும் மார்கழி மாதமாகிய தனு மாதத்தில் வரும் திருவாதிரை நட்சத்திரமாகும்.

நட்சத்திரங்கள் இருபத்தேழில் ஒவ்வொரு நட்சத்திரமும் ஒவ்வொரு தேவர்களுக்குரியன. சிவபெருமானுக்கே உரியதாகி திருவாதிரை நட்சத்திரம் பெரும் சிறப்பைப் பெறுகின்றது. செம்மேனியுடைய சிவபெருமானுக்கு இந் நட்சத்திரம் தனியானதாகவும் செவ்வொளி வீசுவதாகவும் அமைந்துள்ளது.'' பௌர்ணமித் திதியும் - திருவாதிரை நட்சத் திரமும் ஒருங்கே வருவது மார்கழித் திங்களிலே மட்டுமே. இதன் காரணமாகவே மாதங்களில் சிறந்தது மார்கழி எனப்படுகிறது.

இந்துக்களின் முதல்வனாகிய சிவனது மூர்த்தமாகிய நடராஜருக்கு வருடத்தில் ஆறு அபிஷேக தினங்களுண்டு. அவையாவன - சித்திரைத் திருவோணம், ஆனி உத்தரம், ஆவணி சுக்கில பட்ஷ சதுர்த்தசி, புரட்டாதி சுக்கில பட்ஷ சதுர்த்தசி, மார்கழித் திருவாதிரை, மாசி சுக்கல பட்ஷ சதுர்த்தசி என்பனவாம். ஆனி உத்தரமும் மார்கழித் திருவாதிரையும் நோன்புக்குரியவை.

தில்லைச் சிதம்பரம் இந்து சமயத்தவரின் பெரும் கோயில். இங்கே மார்கழித் திருவாதிரை நடராஜர் அபிஷேகத் தினத்திற்கு முன் பத்து நாள்களும் உற்சவமெடுப்பவர். இதனைப் பின்பற்றி கூர்த்தபிரான் எழுந்தருளி திருநடனம் புரிகின்ற திருவாரூர் ஏனைய பாரதத் தலங்கள், ஈழத்திலமைந்த தலங்களிலும் ஆதிரை உற்சவம் நடைபெறும். இப்பத்துத் தினங்களும் திருவெம்பாவை விரதமாகக் கொள்ளப்படுகின்றது. சமய குரவர்களான அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோரது காலத்தின் முன்னே இப்பாவை நோன்பு அனுஷ்டிக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. பண்டைய காலத்துப் பெண்கள் மழை வேண்டியும் நல்ல கணவரை வேண்டியும் இந்நோன்பினை அனுஷ்டித்து வந்தனர். அதிகாலையில் துயிலெழுந்து ஏனைய பெண்களையும் அழைத்துக் கொண்டு கூட்டம் கூட்டமாக நீர் நிலைகளுக்குச் சென்று நீராடி இறை வழி பாடு செய்து விர தம் அனுஷ்டித்தனர்.

*''உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று*
*அங்கப் பழஞ்சொல் புதுக்குமெம் அச்சத்தால்*
*எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப் போங்கேள்*
*எங்கொங்கை நின்னப்பர் அல்லார் தோள் சேரற்க*
*எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க*
*கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க*
*இங்கிப் பரிசே எமக்கு எங்கோன்! நல் குதியேல்*
*எங்கொழிலென் ஞாயிறு எமக்கேலோ ரெம்பாவாய்.*

கன்னிப் பெண்கள் சிவபக்தி நிறைந்த சிவ சீலரையே தம் கணவராக அமையவேண்டும் என்று வரங்கேட்டு பாடுவதாக இத்திருவெம்பாவை பாடல் மூலம் அறியப்படுகிறது.

இவ்வாறு பெரும் சிறப்புடைய திருவாதிரைத் தரிசனம் இன்று ஞாயிற்றுக்கிழமை பின்னிரவு மூன்று மணி தொடக்கம் நாளை திங்கட்கிழமை சூரியஉதய நேரத்தில் இந்தியாவில் சிதம்பரத்திலும், ஈழத்தில் காரைநகர் சிவன் கோயிலிலும் அத்தோடு அனைத்து சிவாலயங்களிலும் நிகழ இருப்பதால் சைவர்களாகிய யாவனைவரும் உதயத்தில் நடேசர் ஆருத்திரா அபிஷேகம், தரிசனம் கண்டு கழிப்புற்று பெரும் பேறு பெற்றுய்வோமாக.

அ.நமசிவாயம்பிள்ளை
(காரைநகர்).

# "இம்மானுவேல் என்றால் 'கடவுள் நம்முடன் இருக்கின்றார்' என்பது பொருள்"

''நம்மோடு, நமக்காக எங்கும் நீக்கமற நிறைந்துள்ளார் எம் இறைவன்'' இன்று திருவருகைக்காலத்தின் நான்காவது வாரம் ஆரம்பம் ஆகின்றது. எம் பயணம் தொடருகின்றது. ஆண்டவரின் பிறப்பு விழாவிற்கு இன்னும் இரண்டு தினங்களே உள்ளன.'' இதோ கன்னிப்பெண் ஓர் ஆண் மகவை பெற்றெடுப்பார் அக் குழந்தைக்கு அவர் இம்மனுவேல் என்று பெயர் இடுவார் (எசா7:14) என்றும் கூறும் இறைவாக்கினர் எசாயவின் அழைப்பு எம் எல்லோரையும் நான் எத்தகைய ஆயத்த நிலையில் இருக்கின்றோம் எனச் சிந்திக்க அழைக் கின்றது வேடிக்கை கலந்த வாடிக்கை நிலை தானா? அல்லது என்னில் அகமாற்றம் உண்டா?

முதலாவதாக: என் இறைவன் எங்கேயோ அல்ல என்னுடன் இருக்கின்றார் என்னும் உணர்வும் அனுபவமும் எனக்கு வேண்டும். வாழ்வில் இடர்களும் துன்பங்களும் வரும்போது ஏன் தான் எனக்கு இப்படி எல்லாம் நடக்கின்றதோ? என்று அல்லல்படும் மனிதர் எமக்கு ''அஞ்சவே வேண்டாம் நான் உங்களோடு இருக்கின்றேன் என திடம் தரும் இறைவனே 'இம்மானுவேல்' எனப் படும் இறைவன் இயேசு.

''இயேசு ஆண்டவர் மனிதன் என்னும் முறையில் தாவீதின் வழி மரபினர்: தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட நிலையில் வல்லமையுள்ள இறைமகன். இவர் இறந்து உயிர்த்தெழுந்ததால் இந்த உண்மை நிலை நாட்டப் பெற்றது, இவரே நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்து'' (உரோ 1:5) என்பார்: இறைத்தூதன் பவுல் அடிகளார். எனவே: இயேசு தந்த 'நித்திய வாழ்வு' என்னும் ஊற்று எம் எல்லோரையும் அவருக்குள் 'வாழ' அழைக்கிறது. எனவே ஆண்டவர் இயேசுவை விசுவசித்து வாழும் ஒரு மனிதன்:

* வாழ்வில் வீழ்வதில்லை.
* துன்பத்தின் துவழுவதில்லை
* வேதனையில்வெந்துபோவது இல்லை

நமது வாழ்வில் நாம் கவலைகளோடும் கண்ணீரோடும் வாழ்வதற்கான காரணம், ஏராளமான பிரச்சினைகள் நம் வாழ்வில் உண்டு என்பதால் அல்ல: மாறாக இறைவன் நமக்காக இருப்பதை உணராமல் இருப்பதே. இன்று ஆண்டவர் இயேசு உனக்கு சொல்லும் செய்தி உனக்குக் கேட்கிறதா? 'மகனே, மகளே நான் உன்னோடு இருப்பதற்காக உன்னைத் தேடி உன் இயல்பிலே வருகின்றேன். ஏன் இன்னும் கலக்கத்திலும் கண்ணீரிலும் உன் நாள்களைக் கழிக்கிறாய்? எழுந்து துணிவு கொள்! நான் உனக்கு தரும் சக்தியையும் வல்லமையையும் உனதாக்கு. உன் வாழ்வு செழிப்படைவதை நீகாண்பாய்.'

இரண்டாவதாக: ''அவருக்கு இயேசு என்று பெயரிடுவீர். ஏனெனில் அவர் தம் மக்களை அவருடைய பாவங்களிலிருந்து மீட்பார்'' (மத்1:12) எனவே பாவிகள் எம்மை, தூயோராய் பிறப்படையச்செய்ய, பாவிகள் மனந்திரும்பி மீட்படைய வேண்டும் என்ற அழைப்பானது வெறும் வார்த்தையாக மட்டும் நில்லாமல், எமது அனுபவமாக மாறியது. மனுவுருவாக வடிவெடுத்த ஆண்டவர் இயேசுவில்தான். எனவே



எங்கள் ஒவ்வொருவரது மன மாற்றம், எமது செயற்பாடுகளில் எடுத்துக் காட்டப்பட வேண்டும்.

ஆக, ஆண்டவர் இயேசு என்னோடு என் அருகில் உள்ளார் என்னும் அனுபவ உணர்வும், நான் மீட்படைந்தவன்/ மீட்ப டைந்தவள் என்னும் நன்றிப் பெருக்கும் எமக்குப் புதுநம்பிக்கையை, நிறை மகிழ்சியை, குறைபடாத அமைதியைத் தருவதாக.

எனவே :

பண்டிகைக் கொண்டாட்ட சிந்தனை அலைக்களிப்பில் எம் உண்மை மகிழ்ச்சியை இழந்துவிடாமல் இன்று எம் மத்தியில் எம்மைவிட வாழ்வில் துன்புறும் சகோதரர், சகோதரிகளுக்கு 'நம்பிக்கை, மகிழ்ச்சி, அமைதியை' தரும் ஒரு நற்செயலில் ஈடுபடுவோம்.

குருக்கள், துறவியர்,
திருமடசார்பற்ற சபைகளுக்கான
ஆணைக்குழு,
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

## நாளை

| | |
|---|---|
| மார்கழி - 08 | திங்கட்கிழமை 24.12.2007 |
| திதி : பிரதமை | பி.இ. 06.02 |
| நட்சத்திரம் : | திருவாதிரை பின்னிரவு 04.55 |
| சுபநேரம் | : 12.26 - 01.56 |
| [illegible] | : 07.56 - 09.26 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**INSTITUTE OF INFORMATION TECHNOLOGY**
RDS Building, K.K.S Road, Mallakam.
TP No : 021 4591920 Website : www.iitjaffna.com

**மாபெரும் புலமைப்பரிசில் - 2008**

கணனிக்கற்கைநெறிகளுக்காக IIT வழங்கும் மாபெரும் புலமைப்பரிசில் போட்டிப்பரீட்சை.

காலம் 30.12.2007

அனைவரும் இப்போட்டிப்பரீட்சையில் பங்குபற்றி IIT இன் 90% வரையான புலமைப்பரிசிலை பெற்றுக்கொள்ளலாம். பரீட்சைக்கட்டணம் இலவசம்.

மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.


## செயலமர்வு

யாழ்ப்பாணம், டிசெ.23

தென்மராட்சிப் கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 7,11 ஆகிய வகுப்புகளில் மனைப் பொருளியல் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான புதிய கல்விச் சீர்திருத்தம் தொடர்பான செயலமர்வு நாளை திங்கட்கிழமை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

(202-207)


**வாழ்த்துகின்றோம்**

வலிகாமம் மேற்கு, மானிப்பாய் பிரிவுக்கு மேலதிக விவாகப் பதிவாளராக நியமனம் பெற்றுள்ள சுதுமலை வடக்கைச் சேர்ந்த

**திருமதி சியாமளா இரத்தினசேகரன்**



அவர்களின் பணி நீண்ட காலம் மக்களுக்கு கிடைக்க வேண்டுமென எல்லாம் வல்ல சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளை வேண்டி மனமகிழ்வோடு வாழ்த்துகின்றோம்.

நாமகள் சனசமூக நிலையம்,
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

(69114)

**STUDY IN**
**LONDON** @ Stratford College
**SINGAPORE** @ COLUMBIA BUSINESS SCHOOL
**MALAYSIA** @ KLIUC University College
& to the top universities all over the world

Available Programmes
BSc - Bachelor of Computer Science
BBA - Bachelor of Business Administrations
BA - Bachelor in Hospitality Management
MSc- Master of Computer Science
MSc - MSc. in Strategic Business Information Technology
MSc - MSc. in Mobile Communication
MBA - Master of Business Administration
MBH - Master in Public Health
MEd - Master in Education Management
MPhil / Phd
UNIVERSITY OF Wales Lampeter Programme

BA(Hons) in Business Information Technology
IMIS & UNIVERSITY HERTFORDSHIRE PROGRAMME
BSc(Hons) in Computer Science
IAM & Oxford Brooke University Programme
BA (Hons) in Stragetic Administrative Management
University of London (External Degree Programmes)
LLB - Bachelor of Laws
LLM - Master of Laws
Engineering Programme
Medicine

January Intake going on

**BIHS**
British Institute of Higher Studies International (Pvt) Ltd.
World Class Education
No.15, 1st Floor, 33rd Lane, Wellawatte, Colombo-06.
Tel : 011 2361887, 011 5667299 Fax : 011 5667476
Web : www.bihseducation.com

**வாடகைக்கு**

வெள்ளவத்தை காலி வீதிக்கு அண்மையில் இரு அறைகள் படிக்கும்/ வேலை செய்யும் பெண்களுக்கு வாடகைக்கு விடப்படும்.
0773 149745 (சி/54739)

**வெளிவந்துவிட்டது**

**அஷ்டலக்ஷமி கலண்டர்கள்**

தினக்கலண்டர்:- 230/
மாத படக் கலண்டர்:- 130/

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

அஷ்டலக்ஷமி புத்தகசாலை,
"மயிலகம்",
271/15, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (69091)

**இறைச்சிக்கோழி விற்பனைக்கு**

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (69074)

**வீடு வாடகைக்கு**

கொழும்பு - 05 Anderson Flats (Apollo Hospital அருகில்) இரண்டாம் மாடியில் Fully furnished இரண்டு அறை வீடு ஒருவருடம் அல்லது இரண்டு வருடங்களுக்கு வாடகைக்குண்டு.
விபரங்களுக்கு
0714115004 (கு/54746)

**IELTS**



convenient Location • Guaranteed results • Air conditioned lecture halls • Best lecturers

Essential English Language examination for higher studies, work or migration purposes in uk, Australia, New Zealand, Canada, USA, etc.

FREE IELTS Gift Pack with CDs

Course Schedule

| | Saturday | Sunday |
|---|---|---|
| Duration | 10 weeks | 10 weeks |
| Time | 08.00am - 11.00 am | 08.00am - 11.00 am |
| Commencement | 05th January 2008 | 05th January 2008 |

BRITISH COLLEGE OF ENGLISH
143, Adiyapatham Road, Thirunelvely.
T.P: 0602216027


## DANISH REFUGEE COUNCIL (DRC)

DRC's Sri Lanka program was initiated in 1998 and aims to support durable solutions for Internally Displaced Persons (IDPs) in the north and east of the country. The program includes activities in the sectors of infrastructure rehabilitation, emergency response, protection, and capacity development; and operates within a strategy based on participation and partnership. DRC's Head Office is located in Vavuniya, with district offices in Trincomalee, Kilinochchi, Jaffna, Mannar, and Anuradhapura.

### Vacancy 1
### Technical Field Officer – Jaffna (National Post)

The Technical Field Officer will work within a team with a primary role in emergency activities such as food and NFRI distributions, temporary shelter construction/upgrading monitoring, semi-permanent latrine construction/repairing monitoring, and monitoring cash for work activities. The position will be based in Jaffna, covering the entire Jaffna district.

**Qualifications:**

- National Diploma in Technology and 1 year working experience, or National Certificate in Technology and 3 years working experience;
- Field experience in emergency constructions and emergency item distributions with INGOs is an asset;
- Basic knowledge of SPHERE standards is an asset;
- Basic knowledge of human rights principles;
- Knowledge of government structures;
- Confidence and ability to liaise at all levels;
- Flexibility, enthusiasm and a creative approach;
- Training skills;
- Computer skills in AutoCAD, MS office and data management skills;
- Ability to communicate in written and spoken English;
- Ability to communicate in written and spoken Tamil;
- Ability to communicate in Sinhalese is an asset;

### Vacancy 2
### Field Officer – Jaffna (National Post)

The Field Officer will work within a team with a primary role in emergency activities such as food and NFRI distributions, implementing livelihood activities, and monitoring cash for work activities. The position will be based in Jaffna, covering the entire Jaffna district.

**Qualifications:**

- University graduate
- Field experience in distributions with INGOs is an asset;
- Field experience in conducting needs assessments
- Field experience in identifying / verifying beneficiaries
- Field experience in monitoring and evaluation;
- Basic knowledge of human rights principles;
- Experience with inventory systems is an asset;
- Familiarity with displaced populations and their needs;
- Familiarity with government structures;
- Confidence and ability to liaise at all levels;
- Flexibility, enthusiasm and a creative approach;
- Strong team skills;
- Ability to prepare written reports, meeting minutes, etc.;
- Experience in using MS Office and email;
- Ability to communicate in written and spoken English;
- Ability to communicate in written and spoken Tamil;
- Ability to communicate in Sinhalese is an asset;

**FOR BOTH VACANCIES:**

Please forward your curriculum vitae together with contact address, telephone number and names of three non-related referees to the following address by 15th January 2008. The position applied for as stated in this notice, should be indicated on the top left hand corner of the envelope in applications sent by mail.

Head of Office - Jaffna
'Danish Refugee' Council
18/10 Wyman Road
Nallur, Jaffna
Email: joann@drc-lk.org


**UNIVERSITY of CAMBRIDGE**
**ENGLISH COURSES**

உலகம் முழுவதும் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் பரீட்சைகள்

உலகத்தில் எந்தப் பல்கலைக்கழகத்திலும் மேற்படிப்பை மேற்கொள்ள வேண்டிய தகைமையைப் பெற.

UNIVERSITY of CAMBRIDGE இன் பின்வரும் ஆங்கிலப் பாடநெறி ஒன்றில் இன்றே சேர்ந்து கொள்ளுங்கள்.

**CAMBRIDGE KEY ENGLISH TEST (KET)**

Ket is the First Level of Cambridge Exams in English besed on language used in real life situations and covers the four language skills Reading Writing Listening and Speaking.

**CAMBRIDGE PRELIMINARY ENGLISH TEST (PET)**

- BRITISH COLLEGE OF ENGLISH இல் வகுப்புகள் திங்கள் தொடக்கம் வியாழன் வரை இரண்டு மணி நேரம் தொடர்ந்து ஐந்து மாதங்கட்கு நடைபெறும்.
- டிசம்பர் 2007இல் பரீட்சைகள் கொழும்பில் BRITISH COUNCIL இல் நடைபெறும்.

**CAMBRIDGE FIRST CERTIFICATE IN ENGLISH (FCE)**

- இரு ஒரு மிகவும் உயர்ந்த ஆங்கிலப் பாடநெறி, உலகின் பெரும் பாலான பல்கலைக் கழகங்கள் ஆங்கில தகுதிக்கு IELTS இற்குப் பதிலாக FCE ஐ ஏற்றுக்கொள்கின்றன. எந்த நேரத்திலும் உங்கள் ஆங்கிலத் தேவையைப் பூர்த்திசெய்யும் தலை சிறந்த சான்றிதழ்.
- BRITISHCOLLEGE OF ENGLISH இல் FCE வகுப்புகள் வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் நடைபெறும். பரீட்சை டிசம்பர் மாதம் கொழும்பில் நடைபெற்று மூன்று மாதங்களில் சான்றிதழ் LONDON இலிருந்து கிடைக்கப் பெறுவீர்கள்.
- Each examination covers the four main language skills: Listening, Speaking, Reading and Writing, Speaking பரீட்சையின் போது பரீட்சார்த்தி 30 நிமிடங்கட்கு ஆங்கிலேயர் களுடன் சரளமாக ஆங்கிலத்தில் பேச வேண்டும்.

**CERTIFICATE IN ADVANCED ENGLISH (CAE)**

The CAE is an advanced level Examination for learners of English. CAE is accepted by almost all universities and Colleges in Britain and many others throughout the world.

ஆங்கிலம் பேசும் எல்லா மேலை நாடுகளும் இதனைப் பல்கலைக்கழக அனுமதிக்காக ஏற்றுக் கொள்கின்றன. ஐந்து பாடங்கள் எடுக்க வேண்டும்.


- நூற்றுக்கும் அதிகமான மாணவர்கள் இங்கு பயிற்சி பெற்று நல்ல பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர். British Council இன் அங்கீகாரம் பெற்ற நிறுவனம். முற்றிலும் புதிய நூல்கள் வேண்டிய நேரம் Listening Practice செய்ய வசதிகள் பேச்சுப் பயிற்சி போன்ற சகல பாடநெறிகளும் British Council Colombo இன் நடைமுறை போன்றே.

**பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளை ஆங்கில உயர்கல்வி பெற எமது கல்லூரியில் இன்றே சேருங்கள்.**

**புதிய வகுப்புக்கள் 07.01.2008 இல் ஆரம்பமாகின்றன.**

BRITISH COLLEGE OF ENGLISH
143, Adiyapatham Road, Thirunelvely. T.P:0602216027


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யானைக்குக் காலணி

சிங்கப்பூர் விலங்கியல் பூங்காவில் உள்ள இரண்டு யானைகளுக்குத் தண்ணீர் புகாத காலணிகளை அணிவித்துள்ளனர்.

சிங்கப்பூர் விலங்கியல் பூங்காவில் வளர்க்கப்பட்டு வரும் இரண்டு ஆசிய யானைகளுக்கு அண்மையில் கால் வலி ஏற்பட்டது. இதன் காரணமாக அவற்றின் கால்களைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

இதனையடுத்து யானையின் கால்களுக்கு காலணி ஒன்றைத் தயாரிக்க முடிவு செய்தனர். அந்தக் காலணி தண்ணீர் புகாததாக இருந்தால் மேலும் சிறப்பானதாக இருக்கும் என்று நினைத்தனர்.

இதன் விளைவாக அந்த யானைகள் தற்போது தண்ணீர் புகாத காலணி அணிந்தபடி உலா வருகின்றன.

# விமானத்தில் பறந்த பாம்புகள்



வியட்னாம் நாட்டிற்கு வருகை தந்த விமானத்தில் இருந்த பெட்டியில் நூற்றுக் கணக்கான பாம்புகள் இருந்தது கண்டு அதிகாரிகள் திடுக்கிட்டுப் போனார்கள்.

இந்தோனேஷியாவில் இருந்து வந்த அந்தப் பெட்டியில் மொத்தம் 700 பாம்புகள் இருந்தன. அந்தப் பெட்டியை உரிமை கோரி யாரும் வராததால் பாம்புகளை அப்படியே அழித்து விட்டனர் அதிகாரிகள்.

இந்தப் பாம்புக் கடத்தலின் பின்னே இருப்பவர்களைக் கண்டறிய தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது.

# பசுமைக்குரல்




பசுமைக்குக் குரல் கொடுக்கும் வகையில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் பச்சை விரல்களை உயர்த்தியுள்ளனர்.

இந்தோனேசியாவின் பாலி தீவில் ஐக்கிய நாடுகள் சபை பருவ நிலை தொடர்பான மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் உலகத் தலைவர்கள் கலந்துகொண்டு பருவநிலை மாற்றம் பற்றிய பாதிப்புகளை விவாதித்தனர்.

சுற்றுச் சூழல் ஆர்வலர்களின் கவனத்தை இந்த மாநாடு ஈர்த்தது. இதன் அடையாளமாக சுற்றுச் சூழலில் ஆர்வம் கொண்ட நூற்றுக் கணக்கான இளைஞர்கள் மாநாட்டுத் திடலுக்கு வெளியே திரண்டு பசுமைக் குரல் எழுப்பினர். அவர்கள் தங்கள் கைவிரல்களில் பச்சை நிறத்தைப் பூசிக்கொண்டு, பூமியின் பசுமை பாழாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்னும் செய் தியைக் குறிப்பால் உணர்த்தினர்.

# ஏ.ரி.எம். தவறால் சிறைவாசம்



சீனாவில் தவறுதலாகப் பணத்தை வாரி வழங்கிய ஏ.ரி.எம். இயந்திரத்தின் தாராள தன்மையைப் பயன்படுத்திக் கொண்ட இளைஞர் ஒருவர் சிறையில் தள்ளப்பட்டிருக்கின்றார்.

இந்நாட்டின் ஓடிங் என்னும் இளைஞர் ஏ.ரி.எம். இயந்திரம் ஒன்றில் இருந்து பணம் எடுத்தபோது அது ஒவ்வொரு ஆயிரம் சின ரூபாய்க்கும் ஒரு ரூபாவை மட்டுமே அவரது கணக்கில் கழித்துக் கொண்டது.

ஏ.ரி.எம். இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக இவ்வாறு நிகழ்ந்தது. இதுதான் தருணம் என்று இளைஞர் அந்த இயந்திரத்திலிருந்து லட்சக் கணக்கில் பணம் எடுத்து விட்டார்.


இறுதியில் இந்தத் தவறு கண்டுபிடிக்கப்பட்டு வாலிபர் கைது செய்யப்பட்டிருக்கின்றார். ஏ.ரி.எம். செய்த தவறுக்காக இளைஞரைச் சிறையில் தள்ளுவது என்ன நியாயம் என்று கேள்வி கேட்கின்றனராம்.

# வாள் விற்கத் தடை



ஜப்பான் என்றதுமே நினைவுக்கு வரும் விடயம் அந்த நாட்டின் போர் வீரர்களால் பயன்படுத்தப்படும் வீரவாள்தான். சாமுராய் வாள் என்று அழைக்கப்படும் இந்த வீரவாள்களைச் சேகரித்துவைத்துக்கொள்ளும் பழக்கம் பிரிட்டனில் பெருக்கு இருக்கிறது. பொதுவாகத் தற்காப்புக் கலைமீது ஆர்வம் கொண்டவர்கள் இந்த சேகரிப்பில் ஈடுபடுகின்றனர். ஆனால், தற்போது சாமுராய் வாள்களை வாங்கி வைப்பதற்குப் பிரிட்டன் தடை விதித்துள்ளது. காரணம் அந்நாட்டில் சமீப காலமாகக் குற்றங்கள் அதிகரித்து வருகின்றன. இதற்கு சாமுராய் வாள்கள் நேரடி பொறுப்பு இல்லை என்றாலும் வன்முறை எண்ணத்தை அவை விதைக்கலாம் என்பதால் இந்த தடை நடவடிக்கை.

# பீரங்கித் திருட்டு



பயங்கர திருட்டு என்று சொல்லப்படுவது பற்றிக் கேள்விப் பட்டிருக்கின்றோம். ஆனால் பீரங்கித் திருட்டுப் பற்றி கேள்விப்பட்டிருப்பீர்களா?


பல்கேரிய நாட்டில் இராணுவ அதிகாரி ஒருவர் இப்படிப் பீரங்கித் திருட்டில் ஈடுபட்டிருக்கின்றாராம்.

2 ஆம் உலகப் போரின்போது ஜேர்மனியால் பயன்படுத்தப்பட்ட பீரங்கி இராணுவத் தலைமையகத்தில் வைக்கப்பட்டிருந்தது. அதனை அலெக்சி பெட்ரோ என்னும் இராணுவ அதிகாரி எப்படியோ கடத்திச் சென்று எல்லைக்கு அப்பால் விற்க முயற்சி செய்தாராம். அப்போது அதிகாரிகள் அவரைப் பிடித்து விட்டனர். அவர் ஏற்கனவே இப்படியொரு பீரங்கியைப் பல இலட்சம் டொலர்களுக்கு விற்றிருக்கின்றார். இந்தப் பழைய பீரங்கிகளால் இராணுவத்திற்கு எந்த பயனும் இல்லையென்றாலும் இதனைக் கள்ளச் சந்தையில் வாங்க கலை மற்றும் பழைய பொருள்கள் சேகரிப்பாளர்கள் தயாராக இருக்கின்றனர்.

# இந்திய-ஆஸி. அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடர் எப்படி இருக்கும்?


அனில் கும்ப்ளே

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்திய- ஆஸ்திரேலிய தொடர் எதிர்வரும் 26 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. துடுப்பாட்டத்தில் அனுபவமிக்க இரு அணிகளும் பந்து வீச்சில் அவ்வளவு அனுபவம் இல்லாத வீரர்களையே கொண்டுவிளையாடப்போகின்றது.


ரிக்கி பொண்டிங்


இந்தியா தொடரை வெல்லும் உறுதியுடன் சென்றுள்ளது. இது நிறை வேறினால் அது வரலாறுதான். மேலும் இந்தியாவின் மூத்த வீரர்களான சச்சின், டிராவிட், கங்குலி, லக்ஷ்மன் மற்றும் முக்கியமாக கும்ப்ளே ஆகியோருக்கு இதுவே கடைசி ஆஸ்திரேலியத் தொடராக இருக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதனால் இவர்கள் ஒரு குறிக்கோளுடன் ஆடுவார்கள் என்று ரசிகர்கள் மத் தியில் எதிர்பார்ப்புக் கூடியுள்ளது. இந்திய அணியிலாவது ஜாகீர்கான், அனில் கும்ப்ளே ஆகியோர் ஆஸ்திரேலிய மண்ணில் தேவை யான அனுபவங்களைப் பெற்றனர். ஆஸ்திரேலிய அணியில் பிரட் லீ நீங்கலாக மற்ற பந்துவீச்சாளர்கள் அவ்வளவாக அனுபவம் இல்லாதவர்கள். மெல்பர்ன் ஆட்டக்களம் சமீபகாலங்களாக இந்திய ஆட்டக்களங்கள்போல் நேரமாக நேரமாக பந்துகள் எழும்பாமலும் மெதுவாகவும் செல்லும் ஆட்டக்களமாக இருந்து வருகிறது.

இதனை ஸ்டீவ் வோஹ் கூட ஒப்புக்கொண்டுள்ளார், அதனால்தான் 4 வேகப் பந்து வீச்சாளர்கள் என்பது கொஞ்சம் என்கிறார் அவர். சுழற்பந்து வீச்சாளர் பிராட் ஹாக் அதிகம் அணியில் இடம்பெற வேண்டும் என்கிறார். எப்போதுமே ஆஸ்தி ரேலியாவில் வேகப்பந்து வீச்சாளர்கள் முதல் 3 விக்கெட்டுகளை விரைவில் சாய்க்கும் திறன் கொண்டவர்கள் என்பதனால்தான் ஷேன்வோர்ன், மாக்கில் உள்ளிட்ட சுழற்பந்து வீச்சாளர்கள் எதிரணியைத் திணறடிக்க முடிந்துள்ளது என்பதை நாம் ஒவ்வொரு ஆட்ட நிலவரமாக எடுத்துக் காட்டி நிரூபிக்க முடியும்.

இதுவரையில் இந்திய அணி ஆஸ்திரேலியாவில் தொடரை வென்றதேயில்லை. 32 டெஸ்ட் போட்டிகளில் வெறும் 4 போட்டிகளையே இந்தியா வென்றுள்ளது. 1977,78 பிஷன் பேடி தலைமையில் மேல்போர்ன் மற்றும் சிட்னியில் பாப்சிம்சன் தலைமையிலான இரண்டாம் நிலை ஆஸ்திரேலிய அணியை வென்றுள்ளது.

பின் கவாஸ்கர் தலைமையில் 1981 இல் மெல்போர்ன் மைதானத்தில் கபில்தேவின் அபார பந்துவீச்சால் வெற்றிபெற 142 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் கிரெக் சப்பல் தலைமை ஆஸ்திரேலியாவை 83 ஓட்டங்களுக்குள் வீழ்த்தி தொடரை சமன் செய்தது. பிறகு 2003,04 தொடரில் சௌரவ் கங்குலி தலைமையில் ஸ்டீவ் வோ அணியை




அடிலெய்டில் வீழ்த்தியது. இந்த 4 போட்டிகளில்தான் வெற்றி. 1947, 48 முதல் இதுவரை ஆஸ்திரேலிய அணியுடன் இந்தியா வெறும் 68 டெஸ்ட் போட்டிகளையே விளையாடியுள்ளது. சுமார் 59 ஆண்டுகளில் ஆண்டிற்கு ஒரு டெஸ்ட் என்ற சராசரியில் இந்தியா ஆஸ்திரேலியாவுடன் விளையாடியுள்ளது.

### ஆரம்ப வீரராக இறங்க ராவிட் விருப்பம்

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்டில் ஆரம்ப துடுப்பாட்ட வீரராகக் களம் இறங்கத் தயார் என்று டிராவிட் பத்திரிகையாளர்களுக்குப் பேட்டியின்போது கூறினார்.

ஆஸ்திரோலியாவுக்கு எதிராக எதிர் வரும் 26 ஆம் திகதி ஆரம்பமாகும் முதலாவது டெஸ்ட்டுக்கான இந்திய அணியில் ஆரம்ப ஆட்டக்காரராக யார் யார் களம் இறக்குவது என்பது குறித்து இன்னும் முடிவு செய்யப்படவில்லை. யுவராஜ் சிங்கை அணியில் இடம்பெறச் செய்ய தினேஷ் கார்த்திக்குக்குப் பதிலாக டிராவிட்டை ஆரம்ப வீரராக ஆட வைக்கலாமா என்று பரிசீலிக்கப்பட்டுவருகிறது.

இந்த நிலையில் விக்டோரியா அணிக்கு எதிரான பயிற்சி ஆட்டத்தில் ஆரம்ப ஆட்டக்காரராக விளையாடிய டிராவிட் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

டெஸ்ட் போட்டியில் தொடக்க வீரராக ஆடும்படி என்னைக் கேட்டுக் கொண்டால்

## ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களமிறங்க ராவிட் தயார்

அதனை மகிழ்ச்சியுடன் ஏற்று செயற்பட நான் தயார், அணி நிர்வாகம் எனக்கு எந்த மாதிரியான பணியைக் கொடுத்தாலும் அதனை என்னால் செய்ய முடியும். அணி விரும்பும் எந்த வரிசையிலும் இறங்கி விளையாட ஆர்வமாக இருக்கிறேன். எந்த வரிசையில் இறங்கினாலும் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்த முயற்சிப்பேன்.

எங்கள் அணியில் மத்திய துடுப்பாட்ட வரிசை மிகவும் வலுவாக உள்ளது. சில காலங்களாகத் துடுப்பாட்ட வீரர்கள் நிலையான ஆட்டத்தை அளித்து வருகிறார்கள். அதே நேரத்தில் பல நல்ல இளம் வீரர்கள் அந்த இடத்துக்குப் போட்டி போடுகிறார்கள். அதனை ஒதுக்கிவிட முடியாது.

ஆஸ்திரேலியாவில் நல்ல தொடக்கம் காண்பது கஷ்டமானதாகும். தொடக்கத் தில் அதிக விக்கெட்டுகளை இழக்காமல் பார்த்துக் கொண்டால் பின்னர் அதிக ஓட்டங்களைக் குவிக்கமுடியும். தொடக்க வீரராகக் களம் இறங்குவதற்கும் 3 ஆவது வீரராக ஆடுவதற்கும் பெரிய வித்தியாசம் கிடையாது. மனதளவில்சிறிய மாற்றம்இருக்கும் பவுன்சருக்கு சாதகமான இங்குள்ள மைதானங்களில் "பேக்புட்" அடிப்படை யில் ஆடினால் அதிக ஓட்டங்களைச் சேர்க்க வாய்ப்புள்ளது.-இவ்வாறு டிராவிட் கூறியுள்ளார்.

### கங்குலி முன்னேற்றம்

ஏழு வருடங்களுக்குப் பிறகு கங்குலி டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் முதல் 20 இடத்திற்கு முன்னேறியது குறிப்பிடத்தக்கது. முதல் இன்னிங்சில் இரட்டைச் சதம் எடுத்த கங்குலி இரண்டாவது இன்னிங்சிலும் பொறுப்புடன் துடுப்பாடி 91 ஓட்டங்கள் எடுத்தார். எனினும் ஒரே டெஸ்ட் போட்டியில் ஒரு இரட்டைச் சதமும், சத மும் எடுத்த 7 ஆவது கிரிக்கெட் வீரர் என்ற பெருமையைப் பெறத் தவறினார்.

இதற்கு முன்னதாக டக் வால்டர்ஸ், கிரெக் சப்பல், லாரன்ஸ் ரவ், லாரா, சுனில் கவாஸ்கர், கிரகாம் கூச் ஆகியோர் இந்த மைல்கல்லை எட்டியுள்ளனர். இத் தொடரில் 534 ஓட்டங்கள் குவித்த கங்குலி தொடர்நாயகன் விருதோடு ஆட்ட நாயகன் விருதையும் கைப்பற்றி அசத்தினார். இந்த ஆண்டு நடந்த 9 போட்டிகளில் 1,023 ஓட்டங்கள் குவித்துள்ளார்.

டெஸ்ட் அரங்கில் 6 ஆயிரம் ஓட்டங்களை எட்டும் ஆறாவது இந்திய வீரர் என்ற மைல்கல்லை கங்குலி எட்டினார். மேலும்

**டிலான்**

இந்த ஆண்டு அதிக ஓட்டங்கள் குவித்த இந்திய வீரர்கள் வரிசையில் கங்குலி 693 எடுத்து மூன்றாவது இடத்தில் உள்ளார். முதலிரு இடங்களில் ஜாபர்(784), சச்சின் (699) ஆகியோர் உள்ளனர்.

109 புள்ளிகள் பெற்ற இந்திய அணி இரண்டாம்இடத்தை தென் ஆபிரிக்காவுடன் பகிர்ந்து கொண்டுள்ளது. ஆஸ்திரேலியா 143 புள்ளிகளுடன் முதலிடத்தைத் தக்கவைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்மராட்சிப் பிரதேசத்தில் மேலும் 122பேருக்கு மாதாந்த உதவிக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது

யாழ்ப்பாணம்,டிசெ.23

தென்மராட்சிப் பிரதேசத்தில் அடுத்த வருடம் மேலும் 122 பேருக்கு பொதுசன மாதாந்த உதவிப்பணம் வழங்கப்படவுள்ளது.

இப் பிரதேசத்தில் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினால் 3 ஆயிரத்துக்கு மேற்பட்டோருக்கு பொது சன மாதாந்த உதவிப் பணம் வழங்கப்பட்டு வருகின்றது.

அடுத்த வருடம் தொடக்கம் மேலும் 122 பேருக்கு பொது சன மாதாந்த உத விப் பணம் வழங்க சமூக சேவைகள் திணைக்களம் அனுமதி வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (202-207)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கோப்பாய்ப் பிரதேசத்தில் உள்ள முன்பள்ளி ஆசிரியர்களை இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் ஓய்வூதியத்தில் இணைத்த கள உத்தியோகத்தர் **ஏ.தனராஜ்** அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(69207) **கோப்பாய் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்கள்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**அந்தோனிப்பிள்ளை பிரபாகரன்**

(ஆதிகோயிலடி, வல்வெட்டித்துறை)



தாயின் மடியில் 20.05.1974

கடவுள் அடியில் 19.12.2006

திதி: 23.12.2007

அன்பான எனது அப்பாவே!
உயிரிலும் மேலான என் தெய்வமே!
உம்மை ஊர் போற்ற உத்தமனாக
வாழ்ந்தீர்கள் அப்பா!
எங்களை காலமெல்லாம் கண்ணீர் சிந்த விட்டு
எங்கே மறைந்தீர்கள் அப்பா?
நீங்கள் இல்லாமல் நாங்கள் கண்ணீரில் வாடுகிறோம்
எங்களை எப்படி எல்லாம் தோழில் சுமந்தீர்கள் அப்பா
எங்கள் உள்ளத்தில் உதிரமாக இருக்கிறீர்கள் அப்பா!
எங்களை நீங்கள் தவிக்க விட்டு எங்குசென்றீர்கள் அப்பா?
உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவரை
பிரார்த்திக்கின்றோம்.

இன்று (23.12.2007) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

(69145)

பிரிவால் வாடும்:

ஆதிகோயிலடி,
வல்வெட்டித்துறை.

**மனைவி, பிள்ளைகள், சகோதரி.**

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை திருச்செல்வம்

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை திருச்செல்வம் 19.12.2007 புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை- சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சண்முகராஜா- கைலாசபதி தம்பதியரின் அன்பு மருமகனும் உமாதேவியின் பாசமிகு கணவரும் கஸ்தூரி, கோபிநாத், அசோக்நாத், நவினன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜனகனின் அன்பு மாமனும் ரஞ்சனா, வசந்தகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ராஜேந்திரம், கீதாபிரியதர்ஷினியின் மைத்துனரும் சிறிகரிணியின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2007) ஞாயிற்றுக்கிழமை கொழும்பு கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**ஜனகன்** (மருமகன்),
**கஸ்தூரி** (மகள்).

*187/5, கில்னர் லேன்,*
*யாழ்ப்பாணம்.*

(69239)


**O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான கணினிக்கற்கை நெறிகள் மானிப்பாயில் ஆரம்பம் !!**

**Beginners Diploma in Information Communication Technology**

**UNI TECHNOLOGY**

**Beginners Diploma in ICT -USA & UK-**

* A/L GIT Syllabus, WITH PASCAL & INFORMATION SYSTEM !
* Durations – Four Months only!

உங்கள் பதிவுகளை 27.12.2007ற்கு முன்னர் மேற்க்கொள்ளவும்.

குறிப்பு :- இக் கணினிக் கற்கைநெறிக்கு மானிப்பாயில் உள்ள ஏனைய நிறுவனங்களை விட மிகக் குறைந்த கட்டணம் மட்டுமே அறவிடப்படும் என்பதை மாணவர்கள் கவனத்தில் கொள்ளவும்!!

மேலதிக விபரங்களுக்கு :-

**UNI TECHNOLOGY**
**ICT Education Trainers**
**Manipay**
( மானிப்பாய் பிரதேச சபைக்கு நேர் எதிரே )


## தவறிவிட்டது

அருமைலிங்கம் மல்லிகாதேவி என்பவருடைய தேசிய அ.அட்டை (577932905V) யாழ்ப்பாணத்திற்கும் கச்சேரிக்குமிடையில் தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் A.Malikadevi, K.P. Kovilady, Uduvil East எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

## விற்பனைக்கு

P4, P3 கணனிகள் விற்பனைக்கு.
தொடர்பு: கு.சிறிதரன்,
இல.: 10, நாவலடிலேன், திருநெல்வேலி.

## மணமகன்கள் தேவை

யாழ்.இந்து கௌரவகுடும்பம், 1978, திருவோணம், B.Sc., 1977 ரோகிணி,B.A., 1976, திருவாதிரை, B.Sc.பட்டதாரிப் பெண்களிற்கும், 1989, 2 இல் செவ்வாய், உத்தராடம், A/L படித்த பெண்ணுக்கும் லண்டன்/பிரான்ஸ்/கனடா P.R.உள்ள மணமக்கள் தேவை.

தொடர்புக்கு: ஜேர்மன் 2515540846
யாழ்ப்பாணம்- நேசன், Y.M.H.A. ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. T.P.: 0774005968.

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவகுடும்பம், 1969, பூரட்டாதி, லண்டனில் வசிக்கும் P.R. இல்லாத ஆணுக்கு லண்டன்/ பிரான்ஸ்/ ஜேர்மன் ஆகிய நாடுகளில் P.R.உள்ள பெண்ணை பெற்றோர் எதிர்பார்க்கின்றார்கள்.

தொடர்பு: லண்டன் சுதாகர் -00447985111441.
ஜேர்மன்-2515340846.
யாழ்ப்பாணம்-நேசன், YMHA முன்பாக, திருநெல்வேலி.
T.P.: 0774005968.

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு 3 Kg நிறையுடைய புறொயிலர் மலிவு விலையில் விற்கப்படும். அத்துடன் கல்பேட், ஊர்க்கோழிகள், ஊர்ச்சேவல் விற்பனைக்குண்டு.

**தாசன் பாம்**
158/4, கோயில் வீதி யாழ்ப்பாணம்.

(69238)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறோயிலர், கல்பேட், ஊர்ச்சேவல் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

அரியாலை பாம் சென்ரர்
(யாழ். வர்த். தொழிலாளர் கூ.ச.கி. முன்பாக)
98, புங்கன்குளம் வீதி, அரியாலை

(69209)

## விற்பனைக்கு

நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் ஐஸ்கிறீம் தொழிலக உபகரணங்களும், வியாபார வாகனமும் விற்பனைக்குண்டு.

*விவரங்களுக்கு:*
**கோகுலன்,**
சங்கரத்தை, வட்டுக்கோட்டை.

(69242)

## கட்டட வேலைகள் துரிதகதியில்

தென்மராட்சி பிரதேசத்தில் வீடமைப்புத் திட்டங்களை மேற்கொள்ளும் பயனாளிகளுக்கு சீமெந்து வழங்கப்பட்டதால் கட்டட வேலைகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக வங்கியின் 'நீர்ப்' நிறுவனத்தினா் சீமெந்துமற்றும்கூரைத் தகடுகள் ஆகியவற்றையும் 'நிக்கொட்' நிறுவனத்தினா்சீமெந்தையும் வீடமைப்புத் திட்டப்பயனாளிகளுக்கு வழங்கியதால் கட்டட வேலைகள் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டது. (207)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். பல்கலைக்கழகத்தில் இந்துநாகரிக துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணிபுரிகின்ற

திருமதி

**கலைவாணி இராமநாதன்**

அவர்கள் அண்மையில் பேராசிரியராகப் பதவியுயர்வு பெற்றதையிட்டு அகமகிழ்வுடன் மேலும் பல சிறப்புகளை அடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறோம்.

மகன்-மருமகள் *(லண்டன்)*,
கணேசமூர்த்திகுடும்பத்தினர்
*(இணுவில்)*.

(சி/54778)

## துயர்பகிர்கின்றோம்



அமரர்

**சபாரத்தினம் கனகசபாபதி**

(கிராமஉத்தியோகத்தர்-யா /42,
காரைநகர் கிழக்கு,
காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு)

தோற்றம் 06.02.1951

மறைவு 06.12.2007

விசேட சேவை உத்தியோகத்தராக 1982 இல் அரச சேவையில் இணைந்தவர். சேவை ஒருங்கிணைப்பு மூலம் 1987 முதல் இறக்கும் வரை கிராம உத்தியோகத்தராக தான் சார்ந்த காரைநகர்ப் பிரதேசத்துக்குச் சேவை ஆற்றியவர்.

1990 இல் ஏற்பட்ட தீவக இடப்பெயர்வினால் பரந்து பட்டு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இடம்பெயர்ந்து வாழ்ந்த காரைநகர் மக்களுக்கு ஆற்றிய அரச, சமூக சேவைகள் அளப்பரியன. பண்பாகவும் பணிவாகவும் பழகி அனைவரையும் கவர்ந்தவர். சேவையில் இருக்கும்பொழுது தனது 57 ஆவது அகவையில் இயற்கை எய்திய செய்தி, சக கிராம உத்தியோகத்தர்களை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

அன்னாரின் மறைவினால் துயருறும் குடும்ப உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாண மாவட்ட கிராம உத்தியோகத்தர் சங்கம்.

(69231)

## 2 ஆம் ஆண்டு நினைவு நாள்

மலர்வு 09 . 02 . 1948



உதிர்வு 23 . 12 . 2005

### அமரர் K.K.செல்வநாயகம்

(நீர்வேலி)

அன்று உங்களைப் பிரிந்து எப்படி வாழப்போகிறோம்
என்று மலைத்து நின்றோம்
இன்று உங்களைப் பிரிந்து இரண்டு ஆண்டுகள் ஓடிவிட்டன
நீங்கள் வாழ்க்கைப் பயணத்தில் தடம் பதித்த
ஆற்றல் எமக்கில்லை என்றாலும்
நீங்கள் விட்டுச் சென்ற இடத்திலிருந்து
பணிகளை தொடர வேண்டியது எமது கடமை
பிள்ளைகள் பெற்றோருடன் வாழும்
காலமே சந்தோஷமான காலம் என்பீர்கள்
எமது நிலை புரிந்து செயற்படும் மருகன்
கிடைக்க விண்ணில் இருந்து வழி காட்டினீர்கள் போலும்!
நீங்கள் விட்டுச் சென்ற இடம் இட்டு
நிரப்ப முடியாதது இதுதான் வரலாற்றின் நியதி
என்றும் நீங்கள் எமக்குத் தெய்வமாக
நின்று வழி காட்டுவீர்கள் என்ற
நம்பிக்கையுடன்.....

3150, Schwarzenburg,
Thunstasse 32, Swiss.

**மனைவி, மக்கள், மருமகன்.**

(69147)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரித தபால்கள் பொதிகள் சேவை
X MAS
FedEx Express
லண்டனுக்கு அனுப்பப்படும்
5 Kg பொதிகளுக்கு மிகக்குறைந்த
கட்டணத்தில் விசேட சலுகை
1 Kg 900/=
உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.
நீங்கள் குறிப்பிடும் எந்த முகவரியிலும் ஒப்படைக்கப்படும்
WESTERN UNION
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 7835 (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. தொ.பே. 021 222 7310 (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)

## 31ஆம் நாள் நீங்காத நினைவலைகளும் நன்றி நவிலலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

எங்களுக்காக 30 ★ 06 ★ 1937



எங்களைவிட்டு 21 ★ 11 ★ 2007

### அமரர் செல்லத்துரை செல்வரத்தினம்

எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி அறிந்து உடன் வந்து எமக்கு உதவிய அன்பு உள்ளங்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும், இறுதிக் கிரியைகளில் பங்குகொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று(23.12.2007) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிராத்தனையிலும் மதிய போசனத்திலும் எமது அன்பு உள்ளங்கள் அனைவரையும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*44/15, சங்கிலியன் வீதி, நல்லூர்.* (69256) - குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கனகசபை நாகபூஷணி



புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், கொட்டடி, சீனிவாசகம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை நாகபூஷணி நேற்று(22-12-2007) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட் டார்

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - அன்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மருதப்பு - வள்ளியம்மை தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற கனகசபையின் அன்பு மனைவியும் கமலாதேவி, ஈஸ்வரபாதம்,யோகநாதன், காலஞ்சென்ற நவநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும் மாணிக்கவாசகர், இரத்தினாம்பிகை , சரஸ்வதி ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, நடராசா மற்றும் புஸ்பவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான நாகேசு விஸ்வலிங்கம், சொக்கலிங்கம், கைலாசபிள்ளை (பழக்கடை இரத்தினம்), கார்த்திகேசு மற்றும் சுகந்தமலர், அருணாசலம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2007) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வில்லூன்றி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்,மருமக்கள்,
பேரப்பிள்ளை,
பூட்டப்பிள்ளைகள்.

*8/1சீனிவாசகம் வீதி,*
*கொட்டடி, யாழ்ப்பாணம்.*

### தம்பிப்பிள்ளை செல்வரத்தினம்



காரைநகர், அல்வின் வீதியை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட செல்வரத்தினம் 21.12.2007 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் புதல்வனும் ஐயாத்துரை (காந்தி), காலஞ்சென்ற மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்லமுத்துவின் (பவளம் ) மைத்துனரும், நாகேஸ்வரன், குலனேஸ்வரன், ஜெகதீஸ்வரன், விக்னேஸ்வரன், ஞானேஸ்வரன், இராஜேஸ்வரி ஆகியோரின் சிறிய தகப்பனும், சற்குணராஜா, அற்புதமலர், கெங்காதேவி, பத்மஜோதி ஆகியோரின் பாசமிகு மாமனும், சதீஸ்வரன் , சங்கீதா, விஸ்ணுமன், பிரியதர்ஷன், விஜயதர்ஷன்,கனப்பிரியன், காணுகர்சா, கிசோ ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார் .

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (23.12.2007) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அல்வின் வீதி,*
*காரைநகர்.* (69270)

தகவல்:
ஐயாத்துரை(காந்தி).

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம்,டிசெ.23

நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் ஆலயத்தில் இன்று காலை 6.30 மணிக்கு திருவாசக முற்றோதல் இடம்பெறவுள்ளது. மதியம் அன்னதான நிகழ்வும் இடம்பெறும்.

## வெளிமாவட்ட ஆசிரியர்களுக்கு

யாழ்ப்பாணம்,டிசெ.23

வெளிமாவட்டங்களில் கடமையாற்றி தற்போது யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கின்ற தற்காலிக இணைப்புப் பெறாத - வடமாகாணத்தைச் சேர்ந்த - ஆசிரியர்களை இன்று காலை 9 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆசிரியர்வள நிலையத்துக்குச் சமுகமளிக்குமாறு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் கேட்டுள்ளார். (அ-2)

## கதவு திறந்தது (சிறுகதை)

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிந்தியது கடியது ஆனால் வீரர் வழி அது. புன்மை இருட்கணங்களைப் 'புஸ்' வாணமாக்கிவிட்டு கிளம்புங்கள் போரொலியுடன்! எங்கே!? நடக்கட்டும் உங்கள் நற்பணி! தொடங்கட்டும் உரிமைப் போர்ப்படை எதிர்ப்பு ! கேட்கட்டும் வெற்றிக் கோஷம்! வீழட்டும் வெறி பிடித்த ஆட்சி!'

இது அவன் பேச்சில் ஒரு பகுதி; திடீரென கூச்சல்கள் ஆர்ப்பாட்டங்கள் சண்டைகள். கூட்டத்தின் மீது தடையுத்தரவு!செல்வநாயகன் கையில் விலங்கு! தமிழ் நாட்டிலே பிறந்தும் தன்மானமற்றுப் போன அத்தமிழ்நீதிபதி, மாத வருவாய்க்காக, குற்றமற்றதமிழனை அனுப்பிய இடம் சிறை. ஜெயில் கதவுதிறந்தது- அவனை வரவேற்க! உரிமைக்காகப் போராடி, உண்மையை எடுத்துக் கூறி தாய் நாட்டின் தரத்தை உயர்த்த முயற்சித்ததற்காக அவனுக்கு 6 மாதச் சிறைத்தண்டனை- வெலிக்கடை சிறையில் அல்ல- தமிழ் நாட்டிலேயே சிறை.

கூட்டத்தில் ஏற்பட்ட எதிர்ப்புகளையும் ஆர்ப்பாட்டங்களையும் அடக்கிய 'தீரப்' பணிக்காக அவன் தந்தைக்கு உதவிப் பொலிஸ் சுப்ரின் ரென்டென்ட் என்ற பட்டம் வெறுமனேயல்ல- பாராட்டுக் கூட்டங்களுடன்.

மறியற் கூண்டின் சிறு துவாரங்களினூடாக இயற்கை அழகை ரசித்துக் கொண்டிருந்தான்- நாயகன். இயற்கையின் ஒவ்வோர் அசைவும் ஆறு மாசங்களின் முன் நடந்தவைகளை அவன் ஞாபகாத்துக்கு கொண்டுவந்து காட்டியது.

கதவு திறந்தது. காவற்காரன் 'ஆறு மாசங்கள் கடந்துவிட்டன தம்பி. இன்று உனக்கு விடுதலை' என்றான். சந்தோசத்துடன் நாயகன் திரும்பினான் 'உண்மையாகவா?' எனறு கேட்டன- கண்கள்.

திறந்து கிடந்த கதவினூடாகத் தொலைவில் ஒரு கோபுரம் தெரிந்தது. அதிலே ஒரு கொடி கம்பீரமாகப் பறந்து கொண்டிருந்தது. தமிழனின் தன்மானக் கொடியல்ல-அது சிங்க(ள)க் கொடி! தமிழ் நாட்டுக் கோபுரத்தில் வேறு கொடி. காற்று ஒரு முறைபலமாக வீசியது. கொடி கிழக்கும் மேற்குமாக கூனி ஆடி வளைந்து விட்டு நிமிர்ந் தது. ஆறு மாதங்களின் முன் சிறிது வளைந்து கொடுத்து விட்டு இப்போது நிமிர்ந்து நிற்பதைக் காண அவன் மனம் வெதும்பியது.

ஒரு சிரிப்பொலி. சிங்கம் சிரித்தது. அவன் மனக்கண்முன் பாக்கியமும் சிரித்தாள் கேலிச் சிரிப்புகள்! அவனால் அக்காட்சியை சகிக்க முடியவில்லை. திரும்ப அந்த துவாரங்களிடம் அடைக்கலம் புகுந்து விட்டான். இயற்கை யன்னை அவன் மனதைப் பறித்துக் கொண்டாள்.

கதவுதிறந்தது, ஆனால் அவன் வெறியேறவில்லை உள்ளேயேஇருந்து விட்டான் - வெளியுலகுக்கும் வேதனைச் சிறைக்கும் வித்தியாசம் கிடையாது என்ற எண்ணத்தால்.(ஈழகேசரி 1950)

## மரண அறிவித்தல்

### மயில்வாகனம் பரமேஸ்வரி



வடமராட்சி கலட்டி, கரவெட்டி மேற்கு, கரவெட்டியை பிறப்பிடமாகக் கொண்டவரும் வற்றாப்பளையை வசிப்பிடமாகக் கொண்டவருமான மயில்வாகனம் பரமேஸ்வரி 19.12.2007 புதன்கிழமை வவுனியாவில் காலமானார்

அன்னார் காலஞ் சென்ற மயில்வாகனத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா (பிரபல ஆயுள்வேத வைத்தியர்) - லட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், பொன்னம்பலம் (அமரர்), புவனேஸ்வரி, செல்லம் (அமரர்), மகேஸ்வரி(அமரர்) செல்வராசா(அமரர்), இராஜேஸ்வரி, இரத்தினேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், அமரர்களான திருநாவுக்கரசு - சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மருமகளும், மங்லேஸ்வரன் (அமரர்), ஜீவசவுந்தலா, சாந்தி (ஆசிரியர், வற்றாப்பளை), பரமேஸ்வரன் (லண்டன்), விக்கினேஸ்வரன் (விநாயகர் ஸ்ரோர்ஸ், முள்ளியவளை), சிறிதரன், ஜீவகௌரி, பிரதீபன் ஆகியோரின் அன்புத்தாயும், பாலாம்பிகை, கிருஷ்ணதேவா, கிருபாகரன், குமுதினி, சிவகாந்தன் ஆகியோரின் அன்பு மாமியும், கபிலாஸ், இஷாகோபிகன், தனுசியா, யதுர்சன், அபி, பிரணவன், அஜய், அஜர்யைஜா, சிவராம் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (23.12.2007) ஞாயிற்றுக்கிழமை வற்றாப்பளையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
K.புவனேஸ்வரி (சகோதரி)
"கோகுலம்"
சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய்.

## கண்ணீர் அஞ்சலி



### முத்துக்குமாரு சிவபாலன்

*21.12.2007 இல் எம்மைப் பிரிந்து*
*அகால மரணத்தைத் தழுவிய ஆருயிர் நண்பனே,*

இதயத்தை நொருக்கியது
உன் பிரிவு
இனியவனே
உற்ற தோழனாய்
அன்போடு உறவு கொண்டாய்
'பேபி'யே
நாம் ஆற்றாது அழுகின்றோம்.

சித்தன்கேணி நண்பர்கள்.

(அ/54786)

## மரண அறிவித்தல்கள்

### முத்துக்குமார் சிவபாலன் (பேபி)


வட்டு.மேற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வழக்கம்பரை, தொல்புரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமார் சிவபாலன் (பேபி) 21.12.2007 வெள்ளிக்கிழமை அன்று அகாலமரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2007) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வழக்கம்பரை,*
*தொல்புரம்.*

தகவல்:
மனைவி, மகன்.

### சுப்பிரமணியம் சிவலிங்கம் (குழந்தை)



மல்லாகம், நீலியம்பனையை பிறப்பிடமாகவும் இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சிவலிங்கம் 16.12.2007 அன்று இந்தியாவில் காலமானார்.

அன்னார் சுப்பிரமணியம்-தெய்வநாயகி தம்பதியினரின் புதல்வனும், கமலாதேவி யின் பாசமிகு கணவரும், சின்னையா - சின்னப்பிள்ளை தம்பதியினரின் பாசமிகு மருமகனும், லோகதர்ஷனி(தர்சா- இந்தியா), நிஷாந்தினி (கௌசி - கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தனேந்திரன் (கனடா), விமலன் (கனடா) ஆகியோரின் மாமனாரும்,சிவபிரகாசம், அருளானந்தம், தவமணி, தயாளினி(தயா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் , சரலோகநாதன்(சர்லோ), ஸ்ரீலோகநாதன் (கிளி - இந்தியா), சொக்கலோகநாதன்(செல்வம்), சுப்பிரமணியம் (மணியம்) ஆகியோரின் மைத்துனரும் நாகராசா, மகாலிங்கம் (மகர்), கணேசலிங்கம்(கணேஸ்), தயாபரன்(தயா) ஆகியோரின் சகலனும், சரோஜினி(தேவி), நிர்மலாதேவி, சகி,ஜெயா ஆகியோரின் மைத்துனரும் மிசாந்தின் அன்பு பேரனுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2007) ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*K.K.S வீதி, மல்லாகம்.* (69262)

தகவல்:
நாகராசா.

## மரண அறிவித்தல்



அமரர்

### திருமதி. மார்க்கிரெட் இராசேந்திரம்

சண்டிலிப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும், தேவாலய வீதி, மல்லாகத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. மார்க்கிரெட் இராசேந்திரம் கடந்த வெள்ளிக்கிழமை (21.12.2007) அன்று இத்தாலியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசேந்திரத்தின் அன்பு மனைவியும், மரியநாயகம் (இத்தாலி), மரியகொறற்றி (கொழும்பு), டெய்சிராணி (இத்தாலி), ஜேம்ஸ் பிரபாகர் (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆன்சலோன் (கொழும்பு), யூடிற் நவமலர் (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமியாரும், டியிற் ஜெனஸ்ரீனா, ஸ்ரெபனியா (மாணவிகள் - புனித சாந்த கிளேயர் வித்தியாலயம், கொழும்பு), மக்னோல்ட் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், திரேசம்மா (யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற முத்தம்மா, மரியம்மா (கனடா), ஞானம்மா (கொழும்பு), பத்திமா (வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற ஞானப்பிரகாசம், காலஞ்சென்ற சின்னத்துரை, தங்கராசா, நடராசா, முத்துலிங்கம் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் நாளை (24.12.2007) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் இத்தாலியில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இத்தாலி
00393475806607
00393487143839

தகவல்:
து.ஆன்சலோன் (மருமகன்)
0112554060

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாவசிய உணவுப் பொருள்களை கூ. சங்கங்களில் தாராளமாகப் பெறலாம்

யாழ்ப்பாணம், டிசெ,23.

யாழ் மாவட்டதுக்குக் கப்பல்கள் முலம் தருவிக்கப்பட்ட அரிசி, கோதுமை மா, சீனி, பருப்பு மற்றும் பால்மா என்பவற்றை பொதுமக்கள் கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து தாராளமாக பெற்றுக்கொள்ள முடியும். யாழ அரச அதிபர் கே. கணேஷ் இதனை அறிவித்துள்ளார்.

அத்தியாவசியப் பொருள்களான சம்பா, தீட்டல், நாடு அரிசி வகைகள், கோதுமை மா சீனி, பருப்பு, அங்கர் பால்மா என்பன யாழ். மாவட்டத்திலுள்ள 24 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

இப்பொருட்களை கூட்டுறவுச்சங்கம் கிளைகளில் இருந்து பொதுமக்கள் தாராளமாக பெற்றுக்கொள்ள முடியும்.

அதேவேளை, இந்தப்பொருள்களுக்குரிய வழங்கல் கட்டளைகளை இதுவரை பெற்றுக்கொள்ளாத கூட்டுறவுச் சங்கங்கள் அவற்றை மாவட்ட புனர்வாழ்வு - புனரமைப்பு செயலகத்தில் இருந்து பெற்றுக் கொள்ளமுடியும் என்றும் அரச அதிபர் அறிவித்துள்ளார்.

மேற்படி பொருள்களுக்குரிய விற்பனை விவரங்களையும் அரச அதிபர் வெளியிட்டுள்ளார்.

| 1 கிலோ . | ரூ.சதம் |
|---|---|
| அரிசி(நாடு) | 63/= |
| அரிசி(தீட்டல்) | 57/= |
| அரிசி(சம்பா) | 62.50/= |
| கோதுமா மா | 68.50/= |
| சீனி | 60.50/= |
| பருப்பு | 117.50, 120.50/= |
| 1 அங்கர் பால்மா | 277/= |

# மனிதாபிமானப் பணியாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வலியுறுத்து

கொழும்பு, டிசெ,23.

மனிதாபிமான சேவைகளில் ஈடுபடும் அரசாங்கம் சாரா அமைப்பைச் சேர்ந்தவர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துமாறு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க நிர்வாகிகள் ஜனாதிபதிக்குக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின்பல பிரதேசங்களிலும் மனிதாபிமான நடவடிக்கைகளில் ஈடுபடும் அமைப்புக்களின் சேவையாளர்களுக்கு பாதுகாப்பை அளிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் ஜகத் அபேசிங்க உள்ளிட்ட நிர்வாகிகள் மஹிந்ராத ராஜபக்ஷவுக்கு அனுப்பிய கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-1)

# கிழக்குத் தேர்தல் பெப்ரவரியில்

கொழும்பு, டிசெ,23.

கிழக்கு மாகாணத்தில் எதிர்வரும் பெப்ரவரியில் தேர்தலை நடத்தப்பேவ தாக மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் விரைவில் அறிவிக்கவுள்ளது. கிழக்கு மாகாண அமைச்சின் செயலாளர் கேசியன் ஹேரத் இதனைத் தெரிவித்துள்ளார்

தற்போது கிழக்கில் புள்ளி விவரங்களைத் தயார் செய்து வருகின்றோம் தேர்தலுக்கான நாளை விரைவில் கண்டிப்பாக அறிவிப்போம். தேர்தலை நடத்துவதில் எதுவித நடைமுறைச் சிக்கல்களும் இல்லை என்றும் அவர் சொன்னார். (அ-1)


யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனம்
வட்டுக்கோட்டை

| Certificate Courses | Duration Months |
|---|---|
| Electrical & Electronics | 6 |
| Micro Soft Office | 3 |
| Printing Technology | 3 |
| Computer Hardware | 3 |
| 3D Animation Using Maya | 3 |
| Programming Using Visual Basic | 3 |
| 2D Animation Using Flash | 3 |
| Programming Using C++ | 2 |

ஆரம்பம் 07.01.2008

மேலதிக விவரங்களுக்கு:
The Director, Jaffna College Institute of Technology
Vaddukoddai ☎0602213139/0212228275


# பன்றித் தலைச்சி ஆலய தேர்த்திருவிழா இன்று

யாழ்ப்பாணம்,டிசெ,23.

வரலாற்றுச் சிறப்பு மிக்க மட்டுவில் பன்றித்தலைச்சிக் கண் ணகை அம்மன் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா இன்று ஞாயிற் றுக்கிழமை காலை 8 மணிக்கு வசந்தமண்டப பூசைகளைத் தொடர்ந்து இடம்பெறவுள்ளது. நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழா நடைபெறவுள்ளது. (அ-2-231)

## சமாதானத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதை மீண்டும் வலியுறுத்த விழைகின்றோம். பேச்சுவார்த்தையின் மூலம் மட்டுமே அனைத்துதுறைகளிலும் அனைத்து மக்களுடைய எதிர்பார்புக்களையும் பூர்த்தியாக் கக்கூடிய தீர் வைப் பெற்றுக் கொள்ள முடியும். இதுவே இன்றைய காலத்தின் கட்டாய தேவையுமாகும் - என்றும் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை தமது அறிக்கையில் தெரிவித்துள்ளது. (அ-2)

## கொக்குத்தொடுவாயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னேறி வந்த படையினர் இழப்புக்களுடன் தமது பழைய நிலைக்குத் திரும்பினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதல் குறித்து இச்செய்தி எழுதப்படும்வரை அரச தரப்பில் இருந்து தகவல் எதுவும் வெளிவரவில்லை. (அ-1)

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விட்டெரிந்துகொண்டிருக்கும் இனப்பிரச்சினைக்கு நீதியானதும் நிரந்தரமானதுமான அரசியல் தீர்வே இன்றைய அவசரத் தேவை.

கட்டம் கட்டமாக தங்குமடங்கள் கொண்டு ஓர் அரசியல் யாத்திரையை 'அரசியல் தீர்வு' விடயத்தில் அறிவு படைத்த மனிதர் எவரும் சிந்திக்க முடியாது.

பூரணமானதோர் சுயாட்சியை தமிழ் பேசும் மக்களின் தாயகத்துக்கு உறுதிப்படுத்தும் ஒரு தீர்வுத் திட்டத்தையே தமிழ் பேசும் மக்கள் ஏற்றுக் கொள்ள முடியும்.

இத்தகைய தீர்வே போருக்கு முடிவு எட்டி நிரந்தர அமைதிக்கு வழி வகுக்கும் - என்றும் அவர் தமது நீண்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (அ-1-2)


ICDL
கணனிக் கற்கைநெறி
International Computer Driving Licence

1. இலங்கை உட்பட 160 நாடுகளின் அரசினால் அங்கீகரிக்கப்பட்டது
2. 160 நாடுகளில் பரீட்சை நிலையங்கள்
3. Online Exam
4. இலங்கையிலும், சர்வதேசத்திலும் வேலை வாய்ப்பை உறுதி செய்கிறது

ஏன் நீங்கள் STPயை தெரிவு செய்ய வேண்டும்?
வடக்கு. கிழக்கில் ICDL Testing center அனுமதி பெற்ற ஒரேயொரு நிறுவனம்
மூன்று மாத காலத்தில் ஒரு சர்வதேச சான்றிதழைப் பெற்றுக் கொள்ளுங்கள்
மேலதிக விபரங்களிற்கு: www.icdl.com.
பதிவுகளிற்கு: 25.12.2007 இருந்து
STP Your Partner in IT Solutions 149, Kasthuriar Road. Jaffna.



IDM
இலங்கை அரசினாலும், சர்வதேசத்தினாலும் அங்கீகரிக்கப்பட்ட தனித்துவமான கணனிக் கல்லூரி

O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு விசேட சலுகைக்கட்டணம்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
இன்றே அருகில் உள்ள IDM கிளைகளை நாடுங்கள்.

Courses

| | |
|---|---|
| BTEC Dip in ICT | Web Development |
| BTEC DIBM | JAVA |
| BTEC Dip in Hardware | VB.NET |
| Dip in Accounting packages | PHP |
| MS Office | MY SQL |
| | AutoCAD |

E-Kids Program (5 வயது முதல் இணைந்து கொள்ளலாம்)

Our International University Affiliation
@. University of Wolverhampton - UK
@. Northumbria University - UK
@. London Metropolitan University - UK
@. Charles Sturt University - Australia

யாழ்ப்பாணம் – 216, நாவலர் வீதி.
மானிப்பாய் – முனாமலை லேன் (மகளிர் கல்லூரிக்கு அருகாமையில்)
நெல்லியடி – கொடிகாமம் வீதி, (பஸ் நிலையத்துக்கு அருகாமையில்)
Phone - 021 222 9901
Web: www.idm.org / www.idm.edu



BITSMANS
கல்வி நிறுவனம்
மானிப்பாய்
புதிய பிரிவு A/L வரலாறு
ஆசிரியர்
M.பத்மன் (B.A.Hons)
2008 - Sun 3pm 23.12.2007
2009 - Sun 4pm இன்று
வரலாறு பாடத்தில் அதி கூடிய A தர பெறுபேறுகளை பெற்றுக் கொடுத்த ஆசிரியர்






CB Computer Academy
Station Road, Kondavil. ☎-021-4590291
G.C.E(O/L) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான
இலவசக் கணனிக் கருத்தரங்கு
காலம்: 25.12.2007 (Tuesday) கிறிஸ்மஸ் தினம் காலை 9:30
இடம்: CB Computer Academy விரிவுரை மண்டபம். பதிவுகளை 24.12.07 க்கு முன்னர் மேற்கொள்ளவது விரும்பத்தக்கது.




# மரண அறிவித்தல்கள்

## கந்தையா மகாதேவன்

காரைநகர், களபூமி, பாலாவோடையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, பம்பலப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா மகாதேவன் நேற்று (22.12.2007) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் முன்னாள் பாணந்துறை பிரபல வர்த்தகரான காலஞ்சென்ற S.S.கந்தையா - தெய்வானப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனாவார். அன்னாரின் பூதவுடல் கொழும்பு ஜெயரட்ண மலர்ச் சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*15/2, மெல்போன் அவனியூ,*
*கொழும்பு-04*
*T.P-0012503736.*

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## கனகசிங்கம் சுகந்தன்



குருநகர் மத்திய கிழக்கு வீதியைச் சேர்ந்த கனகசிங்கம் சுகந்தன் அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மண்கும்பானைச் சேர்ந்த முருகேசு கனசிங்கம் - கமலாதேவி தம்பதியரின் அன்பு மகனும் செபமாலை ஜெயா - பரமேஸ்வரி(குருநகர்) தம்பதியரின் மருமகனும் தர்மினிதேவியின்(சோபனா) அன்புக் கணவரும் தபோஜன், சானுஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தயாகரன், தர்மராஜன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2007) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*26/7, மத்திய கிழக்கு வீதி,*
*குருநகர், யாழ்ப்பாணம்.*

தகவல்:
மனைவி.

## செல்வரத்தினம் திருஞானசம்பந்தர்



(கண்ணன் மினிபஸ்)

வல்லை றோட், சங்கானையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரத்தினம் திரு ஞானசம்பந்தர் அவர்கள் நேற்று (22.12.2007) சனிக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்ற செல்வரத்தினம் மற்றும் இராசம்மா தம்பதியினரின் அன்பு மகனும் லலிதாவதியின் அன்பு கணவரும் தினேஸ், திசாயினி,திரோசனின் அன்பு தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (23.12.2007) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வல்லை றோட்,*
*சங்கானை.*

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## நீக்கிலாப்பிள்ளை மரியாம்பிள்ளை



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நீக்கிலாப்பிள்ளை மரியாம்பிள்ளை 20.12.2007 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நீக்கிலாப்பிள்ளை - அன்னம்மாவின் அன்பு மகனும் அக்கினேசம்மாவின் அன்புக் கணவரும் மேரி லூட்ஸ், ஜெறோம் அன்ரன், பஸ்ரியாம்பிள்ளை (ஹொலன்ட்), விக்ரர் வில்லியம் (லண்டன்), மேரிதிரேஸ், பொலிற்பயஸ் (குணம் போட்டோ), பற்றிக் இம்மனுவேல் (லண்டன்), பிறிஜிற்றா ஜக்குலின் (லண்டன்), வுளோறின் ஆகியோரின் பாசமிகு தந்தையும் றெஜினோல்ட், ஸ்ரெலா, ஜெனற், ஜெயமேரி, சவுந்தரராசா, நவநாயகி, குலேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனும் செறினா, நிகாறா, சாம்சன், நிவேதிகா, பிரகாஷினி, பிரதீபன், பிரதீபா, ரம்யா, மெல்வின், அமண்டா, மரிஷா, மரிஸ்ரன், சியாஸ்ரன், ஷலோமி, டிலுஜா, ஜெனி ஆகியோரின் அன்புப் பேரனும் சானுஷன், அனுஷன் ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (24.12.2007) திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சில்லாலை புனித கதிரைமாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் சில்லாலை சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*சில்லாலை,*
*பண்டத்தரிப்பு.*

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.12.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org